சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுருப்யோநம:

# மெய்கண்டசிவதூஷணநிக்ரஹம்.

# மெய்கண்டசிவஸ்தவம்.

இவை

"வைதிகசைவசித்தாந்தசண்டமாருதம்"

ஸ்ரீலஸ்ரீ

சோமசுந்தரநாயகரவர்கள்

மாணாக்கரும்,

M. R. & Co.

பெரம்பூர் இஞ்சினீர் டிபார்ட்மெண்டு

ஸப் இன்ஸ்பெக்டரும்

ஆகிய

தி. முனிசாமிமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

ஸ்ரீலஸ்ரீ நாயகரவர்கள் மாணாக்கரும்,

சென்னைக் கிறிஸ்டியன்காலீஜ் தமிழ்ப்பண்டிதரும்

ஆகிய

நாகப்பட்டினம்

வேதாசலம்பிள்ளையவர்களால்

சென்னை:

"பிரின்ஸ்ஆவ்வேல்ஸ்" அச்சுக்கூடத்தில்

வெளியிடப்பட்டன.

1900.

௵-31, ஐரோட் ஜுலை

சிவமயம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| கூ | க௦ | யாக | யாகிய |
| கரு | எ | ஒன்றெ | ஒன்றெ |
| ,, | கச | விசிட்டடா | விசிட்டா |
| கசா | எ | இறனல் | இதனல் |
| ,, | கஉ | அத்துத | அத்துவித |
| ,, | கசா | அத்துதவித | அத்துவித |
| ,, | உசா | னெறு | ஞென்று |
| கஅ | கஉ | தமாயி | மாயி |
| உக | கூ | அங்ஙதம் | அநந்தம் |
| உஉ | கச | ைச் | ைத |
| உஎ | ரு | பிாமங் | பிரமங் |
| உஅ | எ | என்பபை | என்பவை |

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநமஃ

# மெய்கண்டசிவதூஷண நிக்ரஹம்.

காப்பு.

மெய்கண்ட சிவநிந்தை மேவியே புரிந்துழலும்
பொய்கண்ட தீயரெம புரஞ்சேரப் பெரிதுவக்குங்
கைகொண்ட மாமுகத்துக் கடவுளருள் வாழ்த்தியெமை
யுய்கொண்ட குருமணிதா ளுவந்துநித மேத்திடுவாம்.

குருவணக்கம்.

காமசுந்தர வடிவினர் கண்வலைப் பாசந்
தாமகன்றிட மெய்ம்மொழிப் போதமாந் தநுத்தந்
தேமமார்தரு ஞானவீட் டெனையினி திருத்துஞ்
சோமசுந்தர குருமணி மலர்ப்பதந் தொழுவாம்.

நூல்.

சைவநிந்தையே தவமெனக்கொண்டு வாழும் ஒரு மாயாவாதியார் சிலரைக் கும்புகூட்டிக்கொண்டு, சைவசமயிகள் பிரசங்கஞ்செய்யு மிடங்கடோறும் அவர்களை யனுப்பிச் சில காலமாய்க் கலகல்விளைத்து வருகின்றனர். அந்தக்கூட்டத்தார் சைவப்பிரசங்கிகளோடு சாஸ்திரவாதம் புரியவல்லுநரல்லர். பிரசங்கியார் ஒன்றையெடுத்துச் சொல்லுவதன் முன்னரே மூலைக்குமூலை கிளம்பிநின்று, பெருங்கூச்சலிட்டுப் பிரசங்கவொலி கேட்கவொட்டாமல் ஆரவாரிப்பதே அவர்தொழில். இதனால், மாயாவாதம் சைவத்தைச் செயித்துவிட்டதென்பது அவர்துணிவு. இம்மட்டிலொழியாமல், அவர் வரும்பொழுது ஒரு தஸ்திரமூட்டை கொண்டுவருவர். அவை சிவநிந்தை பொதிந்த காயிதக் குப்பையாம். நாங்கள் அநேக சுவடிகளெழுதி வெளியிட்டு விட்டோம், எங்களை மறுத்தாரொருவருமில்லை யென்று தமது குப்பைத் திரட்சிகளைச் சுட்டிக்கூறி,

சிவநிந்தை - சைவநிந்தை - சைவாசாரியநிந்தை - சிவனடியார்நிந்தை - சிவாகமநிந்தை முதலியவைகளைப் பரப்பியிருக்கும் அந்தச்சுவடிகளை ஸாதுக்கள் பார்க்க அஞ்சுவர். அந்தக் கதம்பங்களி லொன்றாக நவீனமாய் ஒருசுவடி இப்பொழுது வெளியாயிற்று. அதில், பழைய பாட்டிக் கதைகளை நிரம்பியிருப்பதோடு, சைவ சந்தானகுரவர்சிகாமணியாகிய ஸ்ரீமெய்கண்டசிவத்தைத் தூஷித்திருக்குங் கொடுமை எம்மனோர்க்கு அதிக துன்பத்தை விளைக்கின்றது.

என்னெனின், எங்கள் குருபுத்ரசிகாமணியாகிய நாகை வேதாசலம் பிள்ளையவர்கள் ஒருவருடத்திற்குமுன் வெளிப்படுத்திய "முதற்குறள் வாத நிராகரணம்" என்னும் நூலை மறுத்துவிட்டதாக மனப்பால்குடித்து, "முதற்குறள்வாத நிராகரண சததூஷணி" என்னும் பெயர் புனைந்து வெளிப்படுத்திய சுவடியில், அதனுக்கியோர் பின்வருமாறு கூறுகின்றார்.

## பூர்வபட்சம்.

"மெய்கண்டார் மெய்யைக்கண்டனரா? விகாரரூபமுள்ளவனுக்கு மன்மதன் என்று பெயரிருப்பதுபற்றி அவன் அழகுள்ளவனாவனோ? அதுபோல மெய்யிலக்கண மின்னதென்றறியாத ஒருவருக்கு மெய்கண்டார் என்று பெயரிருப்பதுபற்றி அவர் மெய்யைக்கண்டவராவரோ? திருமாலுக்குக் கண்ணனென்று காரணம்பற்றிவந்த பெயர் பிறருக்குக் காரணக்குறியாக்கமாய் வைக்கப்பட்டதுபோல, மெய்கண்டார் என்னும் பெயர் காரணம்பற்றிவாராது, காரணக்குறியாக்கமாய் வைக்கப்பட்டதென்பது கீழ்வருமாற்றா லுணரப்படும். மெய்கண்டசிவனார் சிவஞானபோதம்-முதற் சூத்திரம்-முதலதிகரணத்தில், 'தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்' என்று கூறியிருக்கின்றார். இதில் யாண்டு உள்ளது ஆண்டுத் தோற்றமும் ஈறும் இருக்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது; படவே, கடவுள் உள்ளதாகலின் அதனிடத்தும் தோற்றமும் ஈறும் இருக்கவேண்டும் என்பது சித்திக்கின்றது. கடவுளுக்குத் தோற்றமும் ஈறும் உண்டென்னும் பொருள் படத் 'தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்' என்று கூறுவதுதானா மெய்யைக் கண்டவரது இலக்கணம்? கடவுள் ஆதிமத்தியாந்த ரகிதமாதலின் அதனிடத்துத் தோற்ற

மும் ஈறுமில்லை யெனின், இஃதுண்மையே. ஆனால் மெய் கண்டார் கூறியபடி அக்கடவுள் உள்ளதாகாது; உள்ளதற்குத் தோற்றமும் ஈறும் இருக்கவேண்டு மாதலின். மெய்கண்டார் உள்ளதற்குத் தோற்றமும் ஈறும் இருக்க வேண்டுமென்று கூறுதலினால் அவர் தோற்றமும் ஈறும் இல்லாக்கடவுளை யில்லது என்று கொண்டார் என்பதாம். இதனால் மெய்கண்டார் நாஸ்திகரானார் என்பது திண்ணமாயிற்று. மேலும் 'தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்' என்பதினால் தோற்றமும் ஈறும் பொருந்துகிறகயிற்றில், பாம்பும் உள்ளதாக வேண்டும்; வேண்டவே, உள்ளதன்பால் தோற்றமும் ஈறும் கிடக்கும் என்பது தவறுமென்க ௸ மெய்கண்டார் ௸ ௸ இரண்டாம் அதிகரணத்தில் 'உலகமுள்ளதென்றது, இல்லதற்குத் தோற்றமின்மையின்' என்கிறார். இதில் உள்ளதற்கே தோற்றமுண்டு, இல்லாததற்குத் தோற்ற மின்றென்றேற்படுகின்றது; படவே, தோற்றமில்லாக்கடவுள் இல்லாதது என்றும் தோற்றமுள்ளவுலகம் உள்ளதென்றும் ஏற்பட்டன; படவே, மெய்கண்டார் உலகம் உள்ளதென்றும் கடவுளின்றென்றும் கூறும் உலோகாயதரானா ரென்பது பெறப்பட்டதென்க. மேலும் உள்ளதற்கே தோற்றமுண்டென்னும்போது கயிற்றரவு முள்ளதாகவேண்டும்; அது தோற்றமுடைத்தாயிருத்தலால். இதனால் உள்ளதற்கேதோற்றமுண்டு, இல்லதற்குத் தோற்றமின்றென்பது மறுக்கப்பட்ட தென்பதாம். உலகைச் சத்தெனமருண்டு அதை உள்ளது என்றுகூறிய ஒருவருக்கு மெய்கண்டார் என்றபெயர் காரணக்குறியாக்கம் பற்றியன்றிக் காரணக்குறியாய் வரவில்லையென்க. காரணக்குறி பற்றி அவருக்கு மெய்கண்டார் என்று பெயர்வந்தால் அவர் உலகை உள்ளதென்று கூறார்; உலகு உள்ளதென்பதற்குப் பிரமாண மின்மையால். இவ்வாறு மெய்கண்டார் கூறியதில் தவறுகள் ஏராளமா யிருக்கின்றன ”

## சித்தாந்தம்.

உலகத்தில், அநேகபெரியமதங்க ளிருக்கின்றன, அவற்றோடு சேராது தன்னினமாகிய உலகாயதத்தோடு சேர்ந்து, அவ்வுலகாயதத்தை “உலகாயதமெனுமொண்டிறற்பாம்பின் - கலாபேதத்த கவிடமெய்தி” என்று ஸ்ரீவாசகப்பெருமான் நிஷேதித்தலை மயத்து 'மிண்டியமாயா வாதமென்னுஞ் சண்டமாருதஞ் சுழித்தடித்

தாஆர்த்து" என்று விலக்கப்பட்ட அற்பநெறியாகிய மாயாவாதப்படுகுழியில் வீழ்ந்துதடுமாறு மோர்ஸாமான்ய ஜீவனாகிய நமது பூர்வபட்சியார் "பொய்கண்டார்காணாப் புனிதமாமத்துவித-மெய்கண்ட நாதனருள் மேவுநாளெந்நாளோ" என்று ஸ்ரீதாயுமானசுவாமிகள் வந்தித்த எமது ஆராவமுதனை ஒருசிறிது மச்சமின்றி 'மெய்கண்டார் மெய்யைக்கண்டனரா? எனவும்' மெய்யிலக்கணமறியாதவர் எனவும், 'மெய்கண்டார் என்பது அவருக்குக் காரணக்குறியாக்கப்பெயர்' எனவுந் தூஷித்த கொடுமைக்கு வைவஸ்வதனை கூலிகொடுக்கத்தக்கவன். ஸ்ரீதாயுமானசுவாமிகள் காரண நாமமென்று வந்தித்த வாய்மைக்கு முன்னே இவ்வஸம்பாவித நாவலர் காரணக்குறியாக்கப் பெயரென்று நிந்தித்தது நிலைகுலையாதுநிற்குமாறு யாங்ஙனம்? முன்னோராகிய ஸ்ரீதாயுமானார் சொற்றதற்குமாறாக இவரது சமயமுன்னோரில் யாராவது காரணக்குறி யாக்கப்பெயரென்று கழறிவாழ்ந்ததுண்டா? அப்பெருந்தகையாருக்கு "சுவேதவனப்பிள்ளையார்" என்பதே காரணக்குறியாக்கப்பெயராம். இவ்வருமைகளையுணர்ந்து பிழைக்கும் புண்ணியமிழந்து 'விகாரரூபமுள்ளவனை மன்மதனென்று அழைப்பதுபோல' என்று புத்திப்ரமங் கொண்டு பேசிய நமதன்பரை வெறுக்கின்றனர் பெரியோரென்க.

இனி மெய்கண்டாரைத் தூஷிக்கவெழுந்தவர் பொய்கண்டாரென்பது சத்தியமாகையால், அவ்வாறு தூஷித்த எதிரியினது பொய்யை இங்கே வரைந்துகாட்டுவோம். எமது மெய்கண்டப் பெருமான் தமதுநூலில், "தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்" என்று கூறியருளியது சத்தியம். இந்தமெய்யை மறுத்தார்போன்று 'யாண்டு உள்ளது ஆண்டுத் தோற்றமும் ஈறும் இருக்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது; படவே கடவுள் உள்ளதாகலின் அதனிடத்தும் தோற்றமும் ஈறும் இருக்கவேண்டும் என்பது சித்திக்கின்றது' என்று தமது அறிவின்றுர்மணம் எம்மருங்கும் வீச இவர் வாய்திறந்தது அறிஞர்க்கு நகையையே விளைக்கின்றது. எங்ஙனமெனின், உலகில் பன்றியும் பசுவுமிருக்கின்றன. அவற்றுள், பன்றியோ அமேத்யபோஜனம் பண்ணுகின்றது-பசுவோ, அவ்வாறின்றி வைக்கோலருந்தி வாழ்கின்றது. அவைகளில், பன்றியின் அமேத்யவுணவைக் கண்டவொருவன் அப்பன்றியைப்

போலவே யுழலுமிருகமாகிய பசுவுக்கும் இவ்வமேத்ய வுணவேயன்றே சிறந்திடத்தக்கது என்று கடாவுவானாயின், அவனுக்கு யாதுபதில்கூறலாம்? அன்றியும், கழுதையுங்குதிரையுமோரிடத்திலிருந்தன. அவற்றுள், கழுதையைவண்ணான்தனது மூட்டைசுமக்க வைத்துக்கொண்டான். குதிரையை அரசன் தனது வாகனமாக வைத்துக்கொண்டான். அவைகளில், கழுதையினது முதுகுமூட்டையைக் கண்டவொருவன் இந்தக்கழுதையைப்போலவே உருவத்தி லொருவாறு ஒத்திருக்குங் குதிரையும் வண்ணான்மூட்டையைச் சுமக்கவேண்டியது ஆவசியகமல்லவா என்று கடாவுவானாயின், அவனுக்கு யாது விடையிறுக்கலாம்? இவ்விருவரையும் நமது சததூஷணிக்காரரிடம் அனுப்பிவிட்டால், நமக்குச் சள்ளையில்லாமற்போம். இவ்விருவர் கேள்விகளையுங் கேட்டுமகிழ்ந்து, இப்படியன்றோ கேள்வி கேட்கவேண்டும்-நான்றான் புத்திசாலியென்றிருந்தேன் - என்னின் மிக்கவறிவுடையவர்களாக நீங்கள்காணப்படுகின்றீர்கள்- மெய்கண்டா ரென்பவர் உலகத்தைச்சுட்டி "தோற்றமும் ஈறும் உள்ள தன்பாலே கிடத்தலின்" என்று கூறினார். அப்போது உள்ளதாகிய கடவுளிடத்தும் தோற்றக்கேடுக ளிருக்கவேண்டுமென்று யான் வாதித்தேன் - நீவிரும்யாமும் எழுப்பிய ஆசங்கைகளால் பசுவானது மலந்தின்னவேண்டுமென்றும், குதிரையானது வண்ணான்மூட்டை சுமக்கவேண்டுமென்றும், கடவுளானவர் பிறந்துசாகவேண்டுமென்று மேற்பட்ட வருமையை யாரறியப்பேரீகின்றீர்கள் - எதோ கைகொடுங்கள் பார்ப்போமென்று பூர்வீபட்சி மகிழ்ந்து கூத்தாடுவர்கண்டீர்.

பஞ்சகிர்த்திய ஸம்பந்நராகிய ஸ்ரீபரமேசுவரனை அவரியக்கவியங்கி, உற்பத்தி ஸ்திதி லயங்களை யடைந்து, நடைபெற்றுவருமுலகத்தோடு ஒப்பிடத்துணிந்த இவரது சிற்றமதிக்கு யாவர்தான் வியஸனப்படாமற் போவார்? இதனால், மெய்கண்டசிவத்தின்பா லெழுந்த இவரது துர்வினை மூலதோஹானியாயினதறிக. இன்னுமிந்தப் பொய்கண்ட நண்பர் குயவனையும், மண்ணையும், கடகலசாதிகளையும்பார்த்து நாணுவாராக. மண்ணின்றன்மையையே குயவனுக்குங்கூறி, வரம்பழிப்பா ருண்டுகொல்லோ? இவ்வாறாய தாழ்மதியை நமதன்பர் தம்பாலணுகவொட்டாது இனியேனு மொதுங்கிவாழ்வாராக.

இவரது பிரசங்கத்தி னிடையில் 'கடவுள் ஆதிமத்தியாந் தரகிதமாதலின் அதனிடத்துத் தோற்றமும் ஈறுமில்லை யெனின் இஃதுண்மையே. ஆனால், மெய்கண்டார் கூறியபடி அக்கடவுள் உள்ளதாகாது; உள்ளதற்குத் தோற்றமும் ஈறும் இருக்கவேண்டு மாதலின்' என்று சிலகூறி, எமது மெய்கண்ட நாதன் இவருக்குச் சமாதானங் கூறியதுபோலவும், அதனைத் தாம் மறுத்துவிட்டதுபோலவும் வருவித்தெழுதி வாய்மையிழந்தது பெருந்துக்கமாம். எமது அபபனெழுதியசிவஞானபோதத்தில், எங்காவது பூர்வபட்சியா ரெழுதிக் காட்டியவாறு யாதேனும் வார்த்தையுண்டா? தப்புவினுக்களை வருவித்துக் கொண்டு தடுமாறியவிவர் அதற்குத்தான் யாது பதில் கூறினர்? கடவுள் மாயையைப்போலத் தோற்றக்கேடுகளை யடையவேண்டுமென்று இவ ரேவிய கடாவை யாம்வெட்டிக் காளிக்குப் பலி போட்டுவிட்டோமாகையால், இவரது மெய்கண்டதூஷணம் ஸாதுக்களுக்கு வெகுதுச்சமாம். எமது நியாயாக்னியால் வெந்து மூகம்புலர்ந்த விவரது நாஸ்திகத்வத்தை மறைக்கவே எமது தெய்வத்திருவாளரை நாஸ்திகரென்றுகூறி, வேதனையெய்தப் பெறுகின்றார். கடவுள் - ஆன்மா - உலகம் என்னும் மூன்றில், கடவுளில்லை - ஆன்மா இல்லை - உலகமொன்றேயுளது என்று சாதிக்கும் உலகாயதனை நாஸ்திகனென்று பெரியோர் ஏன் கூறுகின்றனர்? உள்ள மூன்றுபொருள்களில், இரண்டு பொருள்களை இல்லாதனவாக அவன்கூறியது கொண்டேயாம். அவனுக்குத் தமையனாகத் தோன்றிய மாயாவாத சிசுவாகிய விவர் கடவுளில்லை - உலக மில்லை - ஆன்மாவொன்றே யுளது என்று சாதிக்கு நீரராய் வெளிப்பட்டதனால், இவரும் உள்ள மூன்றுபொருள்களில், இரண்டு பொருள்களை இல்லாதனவாகத் துணிந்த நாஸ்திகரேயாயினரென்பது சித்தாந்தமாயிற்று. உலகாயதனுக்கும், மாயாவாதியாகிய தனக்கும் இரண்டுபொருள்களை நீக்குதலும், ஒரேபொருளைக் கோடலும் மரபாயினமையால், இருவருமோரினமாகிய நாஸ்திகரேயாயினர். இத்தகைய நாஸ்திகங்களை வெதுப்பி நிர்மூலப்படுத்தி, உள்ள மூன்று பொருள்களும் உள்ளனவேயென்று சாதித்து, ஆஸ்திக போதத்தை உலகமெங்கும் பரப்பிய எமது அருள்வள்ளலைச் சுட்டி நாஸ்திகரென்று கூறியது இந்தப்பூர்வபட்சியார் எந்த வாழ்வெய்தவோ அறியேம்.

அநுவாதபூர்வபட்சம்.

"தோற்றமும் ஈறும் பொருந்துகிற கயிற்றிற் பாம்பும் உள்ளதாகவேண்டும்; வேண்டவே, உள்ளதன்பால் தோற்றமும் ஈறும் கிடக்கும் என்பது தவறுமென்க."

சித்தாந்தம்.

இவர் 'தோற்றமும் ஈறும் பொருந்துகிற கயிற்றில்' என்றார். தோற்றமும் ஈறும் கயிற்றினிடத்திற் பொருந்துகிற பாம்பு என்று கூறவேண்டுமென்பது இவர்கருத்து. எண்ணியதொன்று, எழுதியது மற்றொன்றுமாக இவரைச் செலுத்திய வினைப்பெருக்கு அதிசயமுடைத்து. தோற்றமும் ஈறும் பொருந்துகிறகயிறு என்று கொண்டால் கயிறுக்குத்தோற்றம், அதற்குஈறு என்று துணியவரும். அங்ஙனந் துணியுங்கால், கயிறுக்குத்தோற்றம் நார்முதலியவற்றினும், அதற்குஈறு அவற்றினிடத்துமே பொருந்தியிருத்தல் சால்புடைத்தாம். இரண்டுவரி தப்பின்றியெழுதத்தெரியாதயிவர் மெய்கண்டார் தூஷணத்திலிறங்கியது இவரது பூர்வகர்மமேயாம். இனி, கயிற்றிற் பொருந்தியிருக்கிற அரவின் றோற்றக்கேடுகள் அரவினுக்குண்டாமாறு யாங்ஙனம்? ஒரு கயிற்றினிடத்தில் மலினநேத்திரமுடையவனுக்கு அரவுதோன்றும். அதேகாலத்தில், நிர்மலநேத்திர முடையவனுக்கு அது தோன்றாது. தோற்றமுண்மையாயின், இருவருக்கும் ஒரேகாலத்தில் சமமாகத் தோன்றவேண்டும். அதவா, மாலைக்கண்ணுடையானுக்குத் தோன்றிய பாம்பு அவனுக்கு அநுபவத்திற்கும் வந்ததில்லை. அநுபவத்திற்கு வராத (சொன்மாத்திரமாய) பாம்பினை இவர் தாபிக்கவந்தது இவருக்கே பெருநஷ்டமாம். எங்ஙனமெனின், இவரது நியாயத்தைக் கடைப்பிடித்து, மாலைக்கண்ணுடையான் இப்பியிற்றோன்றுகிற வெள்ளியைச் சுட்டி, ஐயா மாயாவாதியாரே! உமக்கு நான் கொடுக்கவேண்டிய நூறுரூபா கடனுக்கு இதோ தோன்றுகிற இப்பிவெள்ளியை யெடுத்துக்கொண்டு சுகமாய்ப்போம் என்று சொல்லுவானாயின், இவரென்செய்வார்? இப்பிவெள்ளியைத் தள்ளிவிட்டால், தமது மாயாவாதம் நாற்றமெடுத்துப்போகின்றது. அதனை அங்கீகாரம்பண்ணினால், நூறுரூபாநஷ்டம் தலையிலேறுகின்றது. இவ்வாறு தொலையத்தக்க அரவின் றோற்றக்கேடுகளை இனியிவரது

குருவுக்குத் தட்சணை தாம்பூலத்துடன் திலதர்ப்பணம் பண்ணிவிடக்கடவர்.

### அநுவாதபூர்வபட்சம்.

"உலகமுள்ள தென்றது 'இல்லதற்குத் தோற்றமின்மையின்' என்கிறார். இதில் உள்ளதற்கே தோற்றமுண்டு, இல்லதற்குத் தோற்றமின்றெனப் பெறப்படுகின்றது; படவே, தோற்றமில்லாக் கடவுள் இல்லாதது என்றும், தோற்றமுள்ள உலகம் உள்ளதென்றும் ஏற்பட்டன; படவே, மெய்கண்டார் உலகம் உள்ளதென்றும், கடவுள் இன்றென்றுங் கூறும் உலோகாயதராயினரொன்பது பெறப்பட்டதென்க"

### சித்தாந்தம்.

'இல்லதற்குத் தோற்றமின்மையின்' என்றது சத்தியம். சசவிஷாணம் இல்லது. இதில், யாதுதோன்ற இவர்கண்டார்? 'இல்லதற்குத் தோற்றமின்மையின்' என்றதேயன்றோ ஈண்டு நிதரிசனமாயது? இல்லது என்றது ஒருபொருளா? (ஒருபொருளுமல்லாத) இல்லாததினிடத்தில் அதன் காரியபேதங்கள் தோன்றுமென்னு மிவனை ஒன்றுமில்லாமையினின்றும் உலகந்தோன்றிய தென்னும் யேசுமதவாதியோடு இணைந்தமதவாதி யென்றேயெண்ணுவர் மேலோரென்க. இவரது கயிற்றரவின்றோற்றத்தை மேலே யாம் துவைத்துவிட்டோமாகையால், அதனை யீண்டு வருவித்திலம். இல்லது இல்லதே! உள்ளது உள்ளதே! என்னும்வாய்மை நியாயவாதிகளே ஒப்பத்தக்கது. நியாயவிச்சேத மதாந்தகார சிசுவாகிய இவருக்கு 'இல்லதற்குத் தோற்றமின்மையின்' என்ற தருக்கவுரை பொருள்படுதற்கு இன்னுமெத்தனைஜந்மம் போகவேண்டுமோ தெரியாது. 'இல்லதற்குத் தோற்றமின்மையின்' என்றபடி 'உள்ளதற்குத் தோற்றமுண்மையின்' என்ற சத்தியவுரையும் ஸாதுக்கள் சபையிற்றானே மணந்திடத்தக்கதென்க.

இனியிவர் 'தோற்றமில்லாக் கடவுள் இல்லாதது என்றும் தோற்றமுள்ள உலகம் உள்ளதென்றும் ஏற்பட்டன' என்று வருவித்து, மெய்கண்டார் உலகத்தையொப்பி, கடவுளை யொதுக்கிய உலகாயதராயினரென்று சுடுமொழிகூறித் தொலைத்தது விந்தையேயாம். மாயையாகிய உலகத்தையொப்பியதுபோல அதிலுழலும் ஆன்மாவையும், அதனை அவ்வா

ன்மாவுக்குக் கன்மாநுகுணமா யூட்டித் தொலைப்பிக்கும் பரனையும் உள்பொருள்களாகத் துணிந்து, திரிபதார்த்தபோத ஞானதேசிகரா யெழுந்தருளிய எமது ஜகத்குருமணியை (கடவுளை இல்பொருளாகக்கொண்ட) உலகாயதனென்று அச்சமின்றி யெழுதத்தூண்டிய கலிபுருஷன் காலிற்றானே இவர் வீழ்ந்து காலங்கடத்தட்டும். அம் மாயாபாசத்திலுழலும் ஜீவன் அல்லது ஆன்மா......ன்றனையே யொப்பி, அதனையே கடவுளென்றுகூறி, (எமதுசொல்லை ஸாட்சிப்படுத்துமாறு) நானே பிரமமென்று நாணின்றிப்பேசி, நகைமுகங்காட்டி விளையாடும் இந்த மாயாவாதியாகதாமே உள்ள தாகிய பிரமத்தில் தோற்றக்கேடுகளெய்திய உலகத்தையொப்பி, முன்வந்த முதல்வராயினாராகையால், இவர்தாமே கடவுளைக் கசக்கி, கருதியவாறெல்லாம் சின்னபின்னப்படுத்தி, அஸத்வியாபாரத்தி லிழிந்தவராயினாரென்க. உலகமானது தோற்றக்கேடுகளெய்தியதென்னுங்கால், 'செய்வோரின்றிச் செய்வினையின்மையின்' என்றபடி ஒரு சேதனமுதலையேற்று நிலைபெறாநிற்கும். நமதன்பர்ஸித்தாந்தப்படிப் பிரமம் உலகமாகியதென்னுங்கால், அதன்றோற்றக்கேடுகளுக்கு (அதனை உலகமாகக் காரியப்படுத்துதற்கு) தனிமுதலாய்நின்ற சேதனம்யாது? செய்வோரின்றிச் செய்வினையின்மையால், இவரதுகடவுளை உலகமாகச்செய்வதற்கு வேறொருகடவுளைத்தேடி, முன்னிருந்த கடவுளை அபரக்கடவுளென்று ஒதுக்கவேண்டிய நிலைமை இவர்தலையிற்றானே வந்துவிடியும். எமதுகடவுள் சேதனமாகையால் அது தானேகாரியப்படுமெனின், நிர்மலமாகிய சேதனம் யாண்டுங் காரியப்படுமாறில்லை. யாம் காரியப்பட்டதெனல் வெறுந்தோற்றமெனின், அவ்வெறுந்தோற்றக் காரியப்பிரசங்கம் எதன்பொருட்டு? யாருக்கு வெறுந்தோற்றம்? ஒன்றாயிருந்த பிரமம் தானேதன்னை வெறுந்தோற்றக்காட்சிப் பிரமமாகக்கண்டு இரண்டாவது பிரமத்துக்கு இடஞ்செய்துகொண்டதெனல் என்னமதியோ? உலகம் பொருளாகக் காணப்படவில்லை – வெறுந்தோற்றமாகக் காணப்படுகின்றது என்று தோற்றவாதங் கூறி மகிழு மிந்நண்பர், பிரமம் - அதிற் பொய்யாய்க்காணப்படு முலகம்- அப்பொய்யுலகத்தை முற்பிரமத்திற்கண்டு பிரமிக்கும் வேறொருபொருள் - அவ்வாறுபிரமித்தற்குக் காரணம் முதலியவைகளையொப்பி, வெளிவராவிட்டால், வேறு கதியில்லை.

உள்ளதாகியவுலகம் தோற்றக்கேடுகளை யெய்தாநிற்குமென்ற போதத்தை யிழித்துக்கூறிய பாவந்தானே இவரதுபிரமத்தை அல்லலில்விடுத்து, இவரை அஸப்யவாதத்திற்செலுத்தி, அவ திப்படுத்தியுதென்க. பிரமத்தில் எல்லாம் வெறுந்தோற்றம்-யாவும்பொய் என்றுவாதிடும் நமது பூர்வபட்சிக்குத் தனது தேகேந்திரியப் பிராணாந்தக்கரணங்களும், அவைகொண்டு தான் பிரவர்த்திக்குஞ் சேட்டைகளும் வெறுந்தோற்றமும், பொய்யுமாகாது நிலைக்குங்கொல்லோ? அவை நிலையாதபோது இவர் மெய்கண்டசிவத்தைத்தூஷித்து, சுவடியெழுதி வெளியிட்டது வெறுந்தோற்றமும், பொய்யுமாகவே யன்றோ முடியும்? இவ்வஸம்பாவித ஞானத்தைக் கடைப்பிடித்தொழுகுமிவரை (நீ ஏன் மெய்கண்டதூஷணத்தி லிறங்கி, அவரையாசிரயித்துவாழும் பலஸாதுக்களுக்கு இடர்விளைத்தனையென்று) ஒரு நீதியதிபர்கேட்டால், எல்லாம் வெறுந்தோற்றம் யாவும்பொய் - மெய்கண்டாரும்பொய் - நானும்பொய் - நான் அவரைத்தூஷித்ததும் பொய்-நீரும்பொய்-நீர் எம்மைக்கேட்டதும்பொய் என்று விடையிறுப்பாராயின், வெகு அழகாயிருக்குமன்றோ? இவரது மதத்தின்சீர் இவ்வாறு அலக்கண்பட்டு, கண்டவர்சிரிக்குமாறு உலகில் எங்கும்பரவியிருக்குங்காட்சியை யுணராது, ஸ்ரீமெய்கண்டசிவதூஷணத்தைப் பாலும்தெளிதேனும் பாகுமாய்க்கொண்டது இவரது கர்மபலனேயாம். இம்மட்டிலமையாமல், இன்னுஞ் சிறிது கூறுகின்றார்.

### பூர்வபட்சம்.

மெய்கண்டதேவர் அத்துவிதமென்னுஞ் சொல்லை விளக்கினாரென்பது பொய். அவருக்கே அதுதெரியாது. அது வடமொழியாதலின், அதற்குப் பொருளுரைப்பது அவ்வடபாஷையி லொருசிறிதும் பயிற்சியில்லாத இவருக்கு முடியுமாறுயாங்ஙனம்? இவருக்குக் கீர்வாணபாஷை தெரியாதென்பதற்கு இவர் வடநூற் சிவஞானபோதத்திற்குச் செய்துவெளிப்படுத்திய தப்புமொழிபெயர்ப்பே சான்று. இவர் அத்துவிதத்தைப்பற்றிக்கூறியது 'அத்துவிதமென்ற சொல்லானேயேகமென்னின், ஏகமென்று சுட்டுவதுண்மையின், அத்துவிதமென்றசொல்லே யந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு' என்றதே யாம் என்று நமது பூர்வபட்சியார் கூறுகின்றார்.

## சித்தாந்தம்.

இவரே 'அத்துவிதமென்ற சொல்லானே யேகமென்னின் ஏகமென்று சுட்டுவதுண்மையின், அத்துவிதமென்ற சொல்லே யந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு' என்றதை மெய்கண்டார் கூறியதாக எடுத்துக் காட்டினார். மெய்கண்டார் அத்துவிதப்பொருளைக் கூறினாராகவும், அவர்தனை விளக்கவில்லையென்றும், அவருக்கு அது தெரியாதென்றும் நிந்தைபுரிந்தது சால்பாமா? விரிவாயெடுத்துரைக்கவில்லை யெனின், எடுத்துக்காட்டியவளவே போதுமாயின், விரிவு எதற்கு? அவர்கூறிய பகுதிக்கு நமதன்பர் என்னபொருள் கொண்டார்? யாதேனுந் தவறுகண்டாரா? கண்டிருந்தால், ஏனதனையநுவதித்து மறுக்காதொழிந்தார்? அதன்பொருள் அவருக்கு விளங்கவில்லையென்பதே எமதுகருத்து. கொஞ்சம் விளங்கியிருந்தால், சும்மாவிரார். யாதேனுந் தப்புந்தாறுமாக நிந்தைபுரிந்துழல்வர். வடநூலில் எமது சற்குருநாதருக்குச் சிறிதுஞானமுமில்லையென்ற பூர்வபட்சியார் 'அத்துவிதமென்ற சொல்லே யந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு' என்றதில், 'அந்நியநாத்தி' என்றதை என்னமொழியாகக்கண்டார்? இவரே அவரது வடமொழிப்பிரயோகத்தை யெடுத்துக்காட்டிவிட்டு, பின்னர்த்தூஷித்தது என்னகொடுமை? எமது சிவஞானமணிக்கு வடமொழியும், தென்மொழியும் கற்றுவந்தனவல்ல. இவர் திருவவதாரஞ்செய்த இரண்டரைவருடமளவும் பால்முதலிய ஆகாரங்கொள்ளுதலும், அழுதலும், சிரித்து விளையாடுதலும், ஓடுதலும், ஆடுதலும், வார்த்தைசொல்லுதலுமின்றிக் குழவிக்கல்லொத்துத் தரையிற்கிடந்து திருவருளுபகரிக்க வொருகுறைவுமின்றி வளர்ந்துவந்தனர். இவருக்குத் திருக்கைலையினின்று மெழுந்தருளிய ஸ்ரீபரஞ்சோதி முனிவரோ வடநூற் சிவஞானபோதத்தை யுபதேசித்தருளினர். அதன்பொருளை இவருக்குத் திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப்பிள்ளையார் உபதேசித்தருளினர். அவர்தாமே தென்மொழியையுந் தெரிவித்து, அதிற் சிவஞானபோதத்தைத் திரட்டியுபகரிக்குமாறு கட்டளையிட்டருளினர். இதனால், வடமொழி-தென்மொழிகளிரண்டுந் திருவருளுணர்த்தி யுபகரிக்கத்தெளிந்தவர் ஸ்ரீமெய்கண்டதேவரென்று ஸாதுக்கள்யாவரும் அறிவார்கள். இத்தகைய பெரியபெருமானைச் சுட்டி, நமதன்பர் நிந்தையெழுப்பியது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாம்.

கண்டெழுதியசரிதம் பொய்யென்று இனியிவர் தூஷியாமற் போகார். இவரது அநேகதூஷணங்களி லிதுவுமொன்றாகட்டும். இவைகளுக்குக் கூலிகொடுக்கக் கரியமாட்டுக்காரன் காத்துக்கொண்டிருக்கிறான். இவ்வாறு சிவநிந்தைபுரிந்து, அகம்பிரமவாதங்கூறுவாரை ''யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவர்'' என்றும், அன்னோரியமன்பக்கலே சேரத்தக்கவரென்பதை அறிவிக்கவேண்டி ''தன்முகத்திலுயிர் வரவழைக்குமெம தருமனும் பகுமேய்க்கியாய்த் தனியிருப்ப'' என்றும் ஸ்ரீதாயுமானசுவாமிகள் நன்கு பிரகாசப்படுத்தினர். இதனை யோசித்து, சிவநிந்தைக்கஞ்சாவர் பூர்வதவமுடையாரென்க. இனிச் சிவஞானபோதம் தப்புமொழிபெயர்ப்பாயுள்ளது என்று பூர்வபட்சி கூறியதும் அசட்டுரையேயாம். ஸ்ரீமெய்கண்டப்பெருமான் வடநூற் சிவஞானபோதத்தை ஸ்ரீபரஞ்சோதியாரிடமும், ஸ்ரீபொல்லாப்பிள்ளையாரிடமுங் கற்றுத் தெளிந்ததேயன்றி, அந்நூலை ஒவ்வொருசொல்லாகப் பிரித்து, அவைகளுக்குத் தமிழ்மொழி பெயர்ப்பு எழுதி வெளிப்படுத்தினாரில்லை. தமது நூலினாரம்பத்தில், யாம் வடமொழிச் சிவஞானபோதத்தைத் தென்மொழியில் மொழிபெயர்க்கிறோமென்று கூறியதுமில்லை. தாம் கற்றுத்தெளிந்த சூத்திரக்கருத்துகளைத் தமது அநுபூதிக்கிணங்கத் தமிழ்ச்சூத்திரங்களாற் செய்துவிளக்கினாரென்பதே ஸித்தம். இதனை யொப்பாதபட்சத்தில், வடநூற்சிவஞானபோதம் - முதற்சூத்திரத்தினிறுதியில், ''ஸ்ருஜத்யஸ்யப்ரபுர்ஹர:'' என்னும் பகுதிக்குத் தக்கவாறு தமிழ்மொழிபெயர்ப்பு இல்லாதவாறென்னை? 'ப்ரபுர்ஹர:' என்பது தமக்கு யாதுவிரோதம் பயப்பதாகவோ மொழிபெயர்க்காராயினர்? அல்லது இந்த வெள்ளையானபாடம் தமக்கு எவ்வளவுகடினமாயிருக்கக்கண்டோ மொழிபெயர்க்காதுவிட்டனர்? இவற்றை நோக்கினார்க்கு எமதுகுருநாதர் ஒவ்வொருசொல்லாக மொழிபெயர்த்து நிறுத்தினாரென்னும் வாதம் பொய்யாயொழிந்தவாறறிக. வடமொழிஞானம் சிறிதுமில்லாதவரென்று தூஷித்தபின்னர் 'யாவையுஞ் சூனியம்' என்ற சூத்திரத்தைமாத்திரம் சரியாயெழுதினாரென்றுகொண்டு, அதனைத் தமக்காதாரமாகத் தப்புந்தாறுமாய்ப் பொருள்கொண்டு கொண்டாடித்த இவர் மதியைச் சுட்டெரிப்பதே சால்புடைத்தாம். இவர் கொஞ்சமேனும் பயமின்றித் தமிழ்ச் சிவஞானபோதத்தைத் தப்பு

மொழிபெயர்ப்பு என்று கூசாதெழுதியது காலத்தின் பயனேயாம். எமது தேசிகமூர்த்தியை வடமொழிப்பயிற்சியில்லாதவரென்று தூஷித்தபூர்வபட்சிக்கு வடமொழியிலெவ்வளவு வல்லபமுண்டோ யாமறியேம். இவரையொரு பெரியஸதஸில் நிறுத்தி, ஒருசுலோகத்தைப் படியென்றுசொன்னால், தப்பில்லாமலும் – வடமொழியுச்சரிப்புக்கெடாமலும் படித்துக்காட்டுந் திறமுண்டா? இவருக்கு வடநூல்களிற் சிறிதுவிஷயந் தெரியவேண்டியிருப்பின், யார்யாரிடமோதிரிந்து, யாசித்துத்தெரிந்துகொள்ளவேண்டிய ஸ்திதியிலிவரிருப்பதையுணராது, ஸர்வகலாஸம்பந்நராகிய ஸ்ரீமெய்கண்டசிவத்தைத் தூஷித்தது இவருக்குத் துக்கத்தைப்பயவா தொழியுமோ? அடங்கிவாழ்வாராக.

இனி, எமது ஆண்டகையார் அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளுரைத்த பகுதியையுஞ் சிறிது ஆராய்வாம் "அத்துவிதமென்றசொல்லானே ஏகமென்னின் ஏகமென்று சுட்டுவதுண்மையின், அத்துவிதமென்றசொல்லே யந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு" என்று திருவாய்மலர்ந்தருளினாரன்றே? இதன்பொருளறியாது, வழவழவென்று குப்தமாய்விடுத்த பூர்வபட்சிக்குச் சிறிது புண்ணியமிருத்தலால், அதனுண்மையை யாம் சிறிதுவிளக்கவிசைந்தாம். அத்துவிதமென்றசொல்லானே = அத்துவிதமென்ற சப்தசிரவணமாத்திரத்தானே, (அதற்கு) ஏகமென்னின் = ஏகமென்று நீ பொருள்கூறுவையாயின், ஏகமென்று சுட்டுவதுண்மையின் = பிரமத்தை ஏகமென்று ஜீவனாகிற நீ சுட்டுவது உண்மையானபடியால், அத்துவிதமென்றசொல்லே = (ஏகமென்றுபொருள்பயவாத அதற்குவேறாகிய) அத்துவிதமென்ற சொல்லே, அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு = சிதசித்விசிஷ்டமாந் தன்மையால் அத்துவிதமாய்நின்ற சிவத்துக்கு வேறாக வொருபொருளுமில்லாதவாய்மையை யுணர்த்தியவாறாயிற்று என்பதாம். இதில், அத்துவிதம்–ஏகம் என்னுமிரண்டு சொற்கள் பெறப்பட்டன. அத்துவிதமென்ற சொல்லுக்கும், ஏகமென்ற சொல்லுக்கும் ஒன்று என்றே பொருளுண்டாவதாயின், ஏகசக்ராதிபதி என்பதற்கு அத்துவிதசக்ராதிபதி என்றுகோடல் மரபாமோ? இப்படியே ஏகஸந்தக்ராஹி என்பதற்கு அத்துவிதஸந்தக்ராஹி என்றும், ஏகவாரம் என்பதற்கு அத்துவிதவாரம் என்றும், ஏகபுத்ரன் என்பதற்கு

அத்துவிதபுத்ரன் என்றுங்கூறி, மரபழித்தல் சால்பாமோ? அத்துவிதமென்னுஞ் சொல்லும், ஏகமென்னுஞ் சொல்லும் யாண்டும் ஒரேபொருளைப் பயவாது. அத்துவிதமென்றசொல் இரண்டுபொருள்கள் கூடியிருக்கு நிலையையும், ஏகமென்ற சொல் ஒருபொருள் தனித்திருக்கு நிலையையுங் கூறப்போந்தனவாம். தனித்திருந்தபொருள் மற்றத்தனிப்பொருளோடு பாலும் நீரும்போல விரவியிருக்குங்கால், இரண்டையும் பிரிக்கவொண்ணாது. இவ்வமயத்துப் பாலுக்கு அன்னியமாக நீரில்லாமையால், பாலும் நீருங் கலந்தகாட்சியாகிய அத்துவிதத்துக்குவேறாக 'அந்நியநாத்தி' என்று நீரைக் கூறுவதாயிற்று. இவ்விளக்கத்தாலெமதுபரமகுருநாதர் பரமன் உலகெலாமாயிருக்கு முண்மையை யுணர்த்தப்போந்த அத்துவிதத்தைச்சுட்டி அத்துவிதமென்றசொல்லானே 'அந்நியநாத்தியை யுணர்த்துமாயிடு' என்று விளக்கியவாய்மை சாதிக்கப்பட்டவாறறிக. அந்நியநாத்தியை யுணர்த்துமென் றீண்டுவிளக்கியதனையே ஒழிவிலொடுக்கக்காரர் "தன்னையறியாது" என்ற திருவெண்பாவில் "வேறுண்டாய்த் தானறியாது" என்று துதித்து மகிழ்ந்தனரென்றறிக. இவ்வாறு அத்துவிதம் நிலைபேறுயிடுதல் சிவபரிபூரணத்தையே நிறுத்தும். இவ்வாறு பகுத்துணருமறிவிழந்து, அத்துவிதமென்ற மாத்திரத்தானே ஏகமென்று சாதிக்கவெழுவது அறிவின்மணம் வீசப்பெறாத பெருங்குறையேயாம். உயிருடலெவற்றினிடத்துங் கலந்தியக்குஞ் சிவனாரது தாள் என்னுஞ் சிற்சத்தியை "பண்ணையு மோசையும்போலப் பழமதுவு, மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம் - அண்ணறாள்" என்று துதித்து, அவ்வாறுலகுயிர்கள் சிவனாரது சிற்சத்தியின்கண்ணே புணர்ந்திருக்கு நிலையை 'அத்துவிதமாதல்' என்று எமது மெய்கண்டவாழ்வே யன்றோ பிரசங்கித்தருளியது? இவ்வத்துவிதத்தை ஒன்றென்பார்மதத்தை மறுக்கவே, பின்னர் "அருமறைகளொன்றென்றது" என்று வேதமறுதியிட்டதைக்கூறி, அவ்வாறு முடிந்தமுடிவினை அத்துவிதமென்றுகோடலே யமைவுடைத்தென்பதுபோதர "அத்துவிதமென்றறையுமாங்கு" என்று இறுதிமொழிகூறி, உறுதிவழிதேறி யுலகமுய்யும்வகை யுபகரித்தனரெம்பெருமானென்றறிக.

எமது ஞானக்கொழுந்தவர்களருளிய திருவாக்கில், "ஏகமென்ற சட்டெனுண்மையின்" என்றுகூறியதில், பரனை ஏகமென்று

சுட்டிய ஆன்மாவுக்கு இடங்கண்டுபிடித்துக் காட்டியதற்கு அத்துவிதப்பொலிக விறுக்கும்விடையாது? ஏகமாகிய பிரமமே உள்பொருளாயிடுதலும், அதற்கு இரண்டாவது பொருளில்லாமையைச் சாதித்தலும் நுமதுமதமாயின், ஜகஜீவர்களையொப்பாத நும்மதத்தில் பிரமத்தை ஏகமென்று சுட்டியது யாது என்றுகடாவுவார்க்கு நீவிர் விலங்கிநிற்பதன்றி காவலைசைக்கமுடியுமோ? ஒன்றாகிய பிரமமே தன்னை ஒன்னென்று கூறிக்கொண்டதோ? பிரமத்துக்கு இரண்டாவதாக இவ்வொன்றென்னுஞ்சொல்லு மெங்கிருந்து முளைத்ததோ? தானொன்றேபொருளென்று தானேதன்னை ஏன்சொல்லிக்கொண்டதோ? யாரைப்பார்த்துச் சொல்லியதோ? அவ்வாறு சொல்லாக்கால், அதனாலதற்கு என்னகேடுசூழப்பெறுவதோ? அவ்வாறு ஒன்று என்றுசுட்டித் திருப்தியடைந்தால், என்னசுகப்பேறு கைகூடுவதோ என்று பலவினாக்களை யெழுப்பி, ஆசங்கிக்கும் ஸாதுக்களைக்கண்டஞ்சுவதொழிந்து, இவர் வேறு என்செய்யலாம்? இதனால், அத்துவிதமென்றசொல் ஏகமென்று பொருள்பயவாமையையும், சிவஜீவர்களிருவரும் அநந்யமாயிருக்கும் உண்மையைத் தெரிவிக்கின்றமையையும் விளக்கிய தெனலே அமைவுடைத்து. இவ்வரும்பொருளையே எமது மெய்கண்டவள்ளல் 'அத்துவிதம்' என்னுஞ்சொல்லுக்கு நிறுவினரென்பது போதர ஸ்ரீ தாயுமானசுவாமிகள் முதலிய பெரியோர் "புனிதமாமத்துவித - மெய்கண்டநாதன்" என்றுவந்தித்து வாழ்த்தினரென்றறிக.

ஸ்ரீதாயுமானார் கூறியவிடத்துப் "பொய்கண்டார்காணு அத்துவிதம்" என்றதென்னையெனின், பொய்கண்டார்=மற்றச்சமயவாதிகள் அவர்கள் சங்கரர் - இராமாநுஜர் - ஆநந்ததீர்த்தர் முதலினோர். சங்கரரது 'அத்துவிதம்' ஸ்ரீமெய்கண்டதேவரது அத்துவிதத்தின்முன்னர்க் கீழ்ப்போயினதை மேலேதெரிவித்தோம். இராமாநுஜர்முதலினோரும் சங்கரரது தவறுவழியைப் பின்றொடர்ந்து மோசமெய்தி, 'அத்துவிதம்' என்ற சொல்லுக்கு ஒன்று என்றே பொருள்கொண்டு, அவ்வத்துவிதமென்னுஞ் சொற்குமுன்னே 'விசிட்டம்' என்னுஞ்சொல்லைப் புணர்த்தி 'விசேடிக்கப்பட்ட ஒன்று' எனமயங்கிக்கூறி இடர்ப்பட்டனர். இவ்விசிட்டவாதிகள் விசிட்டாத்துவிதவாதம் என்பதைத்தொலைத்து விசிஷ்டைகவாதம் என்றுகூறிக்கொள்வது

ஒருவாறு பொருந்துமாயினும், அத்துவிதவாதம் என்றுகூறிக்கொள்வதே அவரது விசிஷ்டைகவாதத்தை இனிது நிறுத்துமென்றறிக. இனி ஆநந்ததீர்த்தரோ, பின்வருமாறு கூறுகின்றார். 'அத்துவிதம்' என்றசொல்லில், இரண்டன்மறுதலையாகிய ஒன்று என்று பொருளுண்டாவது ஸித்தம். இரண்டில்லாத பொழுது, ஒன்று என்னும் பிரசங்கத்திற்கு அவகாசமின்று. இறனல், 'அத்துவிதம்' என்றசொல் இரண்டினையே தாபித்த வாறுயிற்று. இரண்டன்மறுதலையாகிய ஒன்றும், ஒன்றன்மறுதலையாகிய இரண்டும் பெறப்பட்ட நிலைகளில், யாம் ஒன்றன்மறுதலையாகிய இரண்டு என்பதைக் கடைப்பிடித்து, எமது துவிதஸித்தாந்தத்தைத் தாபித்தோமென்று அவர் மகிழ்ந்தனர். இவர் தமது துவிதத்தை அத்துதச்சொல்லில், நேரே தாபிக்க வகையிழந்து ஏனையபாடியக்காரரைப்போல ஒன்றென்றே பொருள்கொண்டு, அதற்கு மறுதலைப்பொருள் இரண்டு என்று வருவித்துத் தடுமாறினர். இரண்டன்மறுதலை ஒன்று என்று அத்துதவிதச்சொல்லை இவரொப்பியதுபோல ஒன்றன் மறுதலையாகிய இரண்டென்னுஞ்சொல்லையொப்பி வெளிவருமாற்றலிழந்து, அத்துவிதத்திற்கு இவர் தூரமாய்விட்டமையால், இவரதுமதம் அநாதரணீயமேயாம். ஒன்றன்மறுதலையாகிய இரண்டு என்று சாதிக்குஞ் சொல்லொன்றுதானு முளதாலோவெனின், 'அநேகம்' என்றசொல்லை இவராதரிக்கலாம். துவிதத்தின்மறுதலை அத்துவிதமானபடி, ஏகத்தின்மறுதலை 'அநேகம்' என்று அவர்கூறுங்கால், அதனை யொருவரு மங்கீகரியார். 'அநேகம்' என்னுஞ்சொல் ஏகத்தை மறுத்திலது. இரண்டு என்னும்பொருளையும் பயந்திலது. ஒன்று - இரண்டு - மூன்று - நான்கு - ஐந்து என ஒன்றன்பின்னொருகத் தொடர்ந்துவரும் எண்ணிறந்தவெண்களைச் சாதிக்குநீர்மையினதாம். ஆன்மா, பரமான்மா என்னும் இருபொருள்களின் கலப்பினைச் சாதிக்கவெழுந்த அத்துவிதச்சொல்போல, ஆன்மா-அநான்மா-பரமான்மா என்னும் பதிபசுபாசங்களையும், பசு எண்ணிறந்தனவாதலையும், பாசம் மூன்றுயிடுதலையும், அவற்றுள் மாயை தேகேந்திரியாதிகளாகப் பலபடக் காரியப்பட்டியங்குதலையும், அவை பிரிபடாதுவிளங்குதலையுஞ் சாதிக்கவெழுந்தது அவ்வநேகமென்னுஞ் சொல்லென்றறிக.

'ஏகம்' என்று சிவபரஞ்சுடரைச் சுட்டியதும், 'துவிதம்' என்று சிவஜீவர்களைச் சுட்டியதும், 'அத்துவிதம்' என்று சிவ ஜீவர்கள் கலப்பினைச் சுட்டியதும், 'அநேகம்' என்று பதிபசுபாச ங்களையும் - பசுவின் எல்லைகடந்ததன்மையையும் - பாசங்களை யும் - பாசகாரியங்களையுஞ் சுட்டியதுமாகிய யாவும் சைவவாச கங்களாகவே முடிந்தவாறறிக. இவற்றுள் 'அநேகம்' என்னுஞ் சொல்லினையே "ஏகனநேக னிறைவனடிவெல்க" என்று ஸ்ரீவாச கப்பெருமான் விதந்தோதியருளின ரென்றுணர்க. 'அநேகம்' என்னுஞ்சொல்லின் முற்போந்த 'அகரம்' இன்மைப் பொரு ளால் ஏகமில்லை-சூனியமென்றும், மறுதலைப்பொருளால் ஒன் றன்மறுதலை இரண்டென்றும் பொருள்பயவாமல், ஏகமன்று-ஏகமும், ஏனையவெண்களுங் கலந்திருப்பதனையே போதிப்பது என்றுகோடல் ஸர்வஸம்பிரதிபந்நமாம். அதுபோல அத் துவிதமென்னுஞ் சொல்லின்முற்போந்த 'அகரம்' இன்மைப் பொருளால் இரண்டில்லை-ஒன்றுஎன்றும், மறுதலைப்பொரு ளால் இரண்டன்மறுதலை ஒன்றுஎன்றும் பொருள்பயவாமல், துவிதமல்ல-துவிதமும், ஏகமுங் கலந்திருப்பதைப் போதிப் பது என்றுகோடலே ஸர்வஸம்பிரதிபந்நமாம். இதனானும் சங்கர - ராமாநுஜராதியோர் ஏகவாதஞ்சாதித்ததும், ஆநந்த தீர்த்தர் துவிதவாதஞ்சாதித்ததும் பொய்யாயழிந்தவாறறிக.

சுருதி "సత్యంజ్ఞానమనన్తంబ్రహ్మ" என்று கூறுகின்றது. இதில், 'அநந்தம்ப்ரஹ்மா' என்று பெறப்படுதற்குப் பூர்வபட்சியார் யாது கூறுவர்? ஒன்றாயிருந்த பிரமம் அநந்தமாயிற்று என்று கூறுவதைக்காட்டிலும் வேறுகதியில்லை. அவ்வாறு கொண் டால், ஏகவாதசுருதி கனம்பெற்றிலது. ஒன்றாயிருந்தது பல வாகவேண்டிய ஆவசியகமென்னை? அப்படிப் பின்னராகத்தக் கது முதலிற்றானே (அது உள்ளபொழுதே) பலவாயிராதது என்னை? ஒன்றே பிரமம் எனச்சாதித்தற்கு எல்லாப்பாடியக் காரருங் கஷ்டப்பட்டுத்தேடிய "ఏకమేవాద్వితీయంబ్రహ్మ" என்ற வாக்கியத்தோடு 'అనన్తంబ్రహ్మ' என்றது விரோதித்ததை நமதுபூர் வபட்சியார் தமது விவர்த்தத்தின்மாட்டிவிட்டு ஓடவழிதேடு வர். அது செல்லாது. விவர்த்தவித்தை இவரது சொந்தச்சரக் காம். இதனைவேதமொப்பியதின்று. ஸர்வஸம்ப்ரதிபந்நமாகாத விவரது கைச்சரக்கை (மாயாவாதிகள் தேடிவைத்த அழுகற்

சாக்கை) யாம் மதித்ததில்லை. ஒன்றேபிரமம் - இரண்டாவது பிரமமில்லையென்பாரும், ஒன்றே பிரமம் - இரண்டாவது வஸ்துவாகஜீவனில்லை - உலகமில்லையென்பாரும் ஆடல்படுமாறு "அநந்தம்ப்ரஹ்மா" என்றசுருதி நிலைபெறுமிருத்தற்கு யாரென்ன செய்யலாம்? மெய்ப்பிரமமொன்றென்றும், பொய்ப்பிரமம் பலவென்றும் வேதமுரைத்ததெனல் வேதநிந்தையும், தெய்வநிந்தையுமாம். மாயாவாதிகளைப்போலாது ஒரு பிரமந்தானே பல பிரமமாகியது என்றது பிரமநிந்தை யாமாறு யாங்ஙனமெனின், முதலிற்றனே இதனை மறுத்தோம். அன்றியு மிப்போதொன்று கேட்கிறோம். ஒருபிரமம் அல்லது முதற்பிரமம் (சிவன் - விஷ்ணு - பிரமன் முதலினோரில்) யாவராவதாகட்டும். பிந்தியபிரமங்கள் (அநந்தம் பிரமங்கள்) யாவை? அந்தப் பிரமக்கூட்டங்களைக்காட்டி, அவை சிவனாது வடிவங்கள் அல்லது விஷ்ணுவினது வடிவங்களென்று சாதிக்குமாதாவுளதேல் பூர்வபட்சிகள் வெளிவரட்டும். இந்திரன்-சந்திரன்-சூரியன் முதலியவர்களைத் தெய்வக்கூட்டத்திலெண்ணினும், அவர்களைச் சீவர்களாகவே யொதுக்கி, சைவர்களும்-வைஷ்ணவர்களும் "அநந்தம் ப்ரஹ்மா" என்றசுருதியி லன்னோர்க்கு இடங்கொடுக்கமாட்டார்கள். வேதமானது "ஸர்வே தேவா: பஶவ:" என்று தேவர்களைப் பிரமங்களல்லவென்று வர்ஜித்துவிட்டது. இவ்வாறு வேதம்விளக்கியும், சைவருள் ஸ்ரீகண்டாசாரியரும், வைஷ்ணவராகிய இராமாநுஜாசாரியரும் தேவர்களையும், மனுஷ்யபசுபட்சி யாதிகளையும், பிருதிவ்யாதி ஸர்வப்பிரபஞ்சங்களையும், பிரமத்தின் காரியபேதங்களாகவொப்பித்தடுமாறி, முன்னொடுபின்முரணி இடர்ப்படுகின்றனர். இதனை வின்னோர் "அநந்தம்ப்ரஹ்மா" என்றதை யாதரித்து, பிரமம் சத்தியமானபடி, அதன் காரியபேதங்களாகிய ஜடாஜடங்கள் யாவும் சத்தியமென்றுகொண்டு, மிச்சாவாதத்தைக் காலின்கீழ்மிதித்து, விவர்த்தவாதத்தை வெந்நீர்விட்டுக் குத்திக்கிளறி வேரொடுகளைந்து 'அநந்தம்ப்ரஹ்மா' என்றதை "அத்விதீயம்ப்ரஹ்மா" என்றதனொடிணைத்து, சபையேறமுந்தலாம். இதுவுமஸங்கதமாயினும், பிரச்சந்நபௌத்தவாதிகளது விவர்த்தம்போலத்துச்சமா யொதுக்கத்தக்க வியல்பினதன்றும். மேற்போந்த "அநந்தம் ப்ரஹ்ம" என்றதை ஸ்தாபிக்கும்பொருட்டு "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என மற்றொருசுருதியெழுந்து கோஷித்தது. இதனையே

"ஸர்வோ வை ருத்ர:" என்று மற்றொருசுருதி இனிது விளக்கியது. இதோ காணப்படுகிறயாவும் பிரமம் - அல்லது உருத்திரன் என்று சுருதிகள்போதிக்கும் பொருள்களை மிச்சையென்று கூசாதுபேசும் விவேகிகளுநறவு நஞ்சினுங்கொடிதென்றுணர்க. நீர்மூடனொருவன் ஒரு அரசனைச்சுட்டி, இவர் கானனீரையெல்லாம் ஏரியிற்கட்டி, அங்கிருந்து குழாய்வழியாக ஊர்களிற்றிருப்பி, பிரஜைகளுக்கு க்ஷேமந்தேடுகின்றாரென்று சொல்வானாயின், அது அரசவள்ளலைப் புகழ்ந்ததாகுமா? மீண்டும் அவ்வரசர்கோமான் இப்பிவெள்ளியால் நாணயங்கள் போட்டு எங்கும் பரப்புகிறாரென்றால், அது அவருக்குத் துதியாகுமா? இவைபோல் (அவர்மதப்படி) ஸத்தாகிய ஜீவஜந்துகளைச்சுட்டி, இவை மிச்சையென்றுகூறி, இவையாவும் பிரமத்தின் சொரூபம் என்றது எங்ஙனே அந்தப் பிரமத்துக்குப் பாரம்யத்தை நாட்டும்? கானனீரையும், இப்பிவெள்ளியையுமாதரித்தானென்று புகழெய்திய அரசனை அந்தக் கானனீர் இப்பிவெள்ளிகளைப்போல இல்பொருளாக நிரூபித்து ஒதுக்குவதுபோலவேயன்றோ மிச்சையாகிய உலகத்தையும், அதனைச் சொரூபமாகவுடைய பிரமத்தையுமொதுக்கி, நமது பூர்வபட்சிக்குச் சூனியவாதியென்று பட்டப்பெயர்கொடுத்து மகிழ்ந்திடுவர் பெரியோர்? 'உலகை ஸத்தென்றுகொண்டவர் மெய்கண்டவராவரா' என்று எமது மெய்கண்டசெல்வத்தைத் தூஷித்த இவர் ஜீவனை-அல்லது ஆன்மாவை ஸத்தென்று கூறியதைக்கண்டு, இவர்தம்பி உலகாயதவள்ளல் விலாவிறச்சிரித்துப் பழிப்பதை இவருணர்ந்திலர். உலகாயதன் உலகினை ஸத்தென்றான். இவர் அவ்வுலகிற்சிக்கி வருந்தும் ஜீவனை (ஆன்மாவை) ஸத்தென்றார். இவையிரண்டும் ஸத்பதார்த்தங்களாயினும், ஸத்தாகிய சிவஸந்நிதியில் உலகம் அஸத்தும், ஆன்மா ஸதஸத்துமாம். ஈண்டு யாமுலகினை அஸத்தென்றது மாயாவாதியைப்போல இல்பொருளாகக் கருதியன்றாம். ஸத்துப்போன்றதல்லாதது (ஜடம்) என்று பிரகாசிப்பித்ததென்றுணர்க. ஜீவனை ஸதஸத்தென்றது ஞானவடிவமாகிய சிவஸத்தைத் தன்துஞானத்தா லறிதலானும், ஜடவடிவமாகிய அஸத்பிரபஞ்சத்தைத் தனதுகிரியையா லியக்கலானுமென்று அறிந்திடுக. ஆன்மாவினது ஞானம் சிவமறிவித்தாலறியும். தானேயறியாது. அதனது கிரியை சிவமசைவித்தாலியங்கும். தானே

யியங்காது. சேதனங்களெல்லாம் சிவனாரது அடிமைகளும், அசேதனங்களெல்லாம் அவரது உடைமைகளுமாம். இவ்வுண்மைபோதரவே "எல்லா முன்னடிமையே யெல்லாமுன்னுடைமையே யெல்லா முன்னுடையசெயலே" என்று ஸ்ரீதாயுமானச்செல்வனார் நன்கு பிரகாசபபடுத்தியருளினர். இந்தப்பிரசங்கத்தால் ஜீவஜகத்துக்கள்யாவும் உள்பொருள்களென்று நாட்டியவிசித்தாந்தமே நிலைத்தவாறாயிற்று. இவ்வாறு தெளிந்தவிவேகிகள் கேவலம் அரிஷ்டவாதிகளை (விவர்த்தவாதிகளாகிய மிச்சாவாதிகளை) எங்ஙனோ மதித்திடுவர்? ஜுன்னோ றிவ்வாறுதொலையவே "அகந்தம்ப்ரஹ்மா" என்ற சுருதியைச் சேதனாசேதனப் பிரபஞ்சத்தை யியக்கவெழுந்த பிரமத்தை நிரூபித்ததொன்றாக நிறுவுதலே அமைவுடைத்தாம்.

இனி "அஜாமேகாம்" என்றதுமுதலிய சுருதிகளில், ஜடாஜடப் பிரபஞ்சங்கள் பரவஸ்துவைப்போல உற்பத்தி யெய்தாத ஸத்பதார்த்தங்க ளென்று பிரஸித்தி யுண்டாகின்றது. இவைகளைப் பரனதுவியாபகத்தி லந்தர்க்கதமாகிய வியாப்தி-வியாப்பியங்களாக நிச்சயித்தனர் பெரியோர். வியாபகப்பொருளுக்கு அப்பாற்பட்டனவாக (வேறாய்நிற்பனவாக) வியாப்தி வியாப்பியங்கள் நில்லாமல் வியாபகவஸ்துவின் கர்ப்பத்திற்றனேயடங்கலால், மூன்று பொருள்களையும் கலப்பாலொரு பொருளாகவே துணிந்து, அவ்வொருபொருளின் பெயராலேயே மற்றப்பொருள்களையு மழைத்துப் புகழ்ந்திடுவர் அறிஞர். கடல்வியாபகம்-நீர்வியாப்தி-உப்புவியாப்யம். இம்மூன்றையும் பிரிக்காமல் கடலென்றபோது நீருங்கடல்-உப்புங்கடலாகின்றது. பொருண்மையால், நீருவர்களாகிய பேதமும், கலப்பினால் கடலென்றுகூறு மபேதமும் சித்திக்கின்றவமைதியே ஈண்டறியத்தக்கது. வியாபகம்=பதி. வியாப்தி=பசு. வியாப்யம்=பாசம். இம்மூன்றையும் பிரிக்காமல், பதி (பிரமம்) என்றபோது பசுவும்பிரமம்-பாசமும் பிரமமாகின்றது. பொருண்மையால் பசுபாசங்களாகிய பேதமும், கலப்பால் பிரமமென்று கூறு மபேதமும் சித்தித்தலையுணர்ந்த பெரியோர் 'அகந்தம்ப்ரஹ்மா' என்ற சுருதியோடு ஏனையமதவாதிகள் பிணங்குதலைக்கண்டு பரிகசிக்கின்றனரெனவறிக. "அன்னம்ப்ரஹ்மேதிவ்யஜாநாத்" என்றது முதலிய வாக்கியங்கள் பஞ்சகோசங்களையும் பிரமம் என்று கோஷிக்கின்றன. இவைகளைப் பிரமமென்றபடியே இந்தப்

பஞ்சகோச விலட்சணனாகிய ஜீவனை (ஆன்மாவை) யும் பிரம மென்றுகூறுகின்றது. இப்படியே இந்திரன்-சந்திரன்-பிரமன்-விஷ்ணு முதலாயினரையும் பிரமம் என்று பிரதிபாதிக்கின்றது. இவ்வாறுவிசாரித்துத் தெளிவார்க்கே 'அநந்தம் ப்ரஹ்மா' என்றதனுண்மை இனிது வியக்தமாமென்க. இந்தச்சுருதியிலேயே "ஏகம்-அநேகம்" என்னுஞ்சொற்களில், அநேகமென்னுஞ்சொல் அடங்கியது. அநேகமென்னுஞ்சொல்லால் பரமன் உலகெலாமாகின்ற பெற்றியை யாம் பிரகாசிப்பித்த வாய்மையையே மீண்டெடுத்துக்கொண்ட 'அநந்தம் ப்ரஹ்மா' என்ற சுருதி நிலைப்பித்தலால், இவற்றாற் முடினப்பட்ட 'அத்துவிதம்' என்றசொல்லுக்கு அபார்த்தங்கொண்டு வெளிவந்தபூர்வபட்சி மதமழிந்து "அத்துவித-மெய்கண்டநாதன்" மதமே பசுமரத்தாணி யறைந்தாற்போல நாட்டப்பட்டவாறறிக. இவ்வுண்மைகளை யறிந்துய்யும் புண்ணியமிழந்த இவர் வேறொருவிசேடங்கண்டு கூறினர். அதனையும் மறுத்தொழிப்பாம். வேதத்தில் அத்துவிதம் என்ற சொல்லேயன்றி ஏகம் என்னுஞ்சொல்லுமிருக்கின்றது. அத்துவிதமென்றசொல் இருபொருள்களின் (சிவஜீவர்களின்) கலப்பையும், ஏகமென்றசொல் ஒருபொருளின் (பரமாத்மாவின்) இருப்பையு முணர்த்துமெனலே அமைவுடைத்தாகவும், அத்துவிதம்=(இரண்டாவதில்லாததாகிய) ஏகமென்றும், ஏகம்=ஒன்றேயாகிய ஏகமென்றுங்கூறுதல் யாங்ஙனமென்று கடாயினர்க்கு அத்துவிதமாகிய ஏகம்இருபொருள்களையொப்பினரைப் பிரதிஷேதித்தும், தனியேநின்ற ஏகம் ஓரேபொருளுண்டெனலைச் சாதித்தும் வேதங்கூறியது என்று விடையிறுத்ததே அவரது பிரசங்கமாம். இதனைவிளக்கவேண்டி ஒரு உபமானமுங் கூறினர். பிம்பசூரியன்-பிரதிபிம்பசூரியன் ஆகிய இரண்டுசூரியர்களைக் கண்டவொருவன் பிம்பசூரியன் மெய்-பிரதிபிம்பசூரியன் பொய்யென்று கோடலொழிந்து, இரண்டு-சூரியர்களும் மெய்யென்று தடுமாறுங்கால், அவன் மயக்கறுத்தற்பொருட்டுப் பிம்பசூரியனொருவனே உள்ளவன், அவனுக்கிரண்டாவது சூரியன்கிடையாது என்றுபோதித்தல் ஆவசியகமன்றோ? அதுபோலப் பிரமம்-பிரமத்தின் பிரதிபிம்பமாகிய உலக மிவைகளைக்கண்டு, இரண்டுபொருள்களுண்டென்று தடுமாறியவொருவனது மயக்கறுத்தற்பொருட்டுப் பிரமம் ஒன்றேயுள்ளது, அதற்கிரண்டாவதுபொருளில்லை என்று போதித்தல்

ஆவசியகமாகாதோ? என்று பின்னர் விரித்துக்காட்டினர். இவரது தப்புமதத்தை நாட்டற்கெழுந்த இவரதுபுத்தியில்,இந் தஸமயம் தெளிவிருந்திருக்கமாட்டாது. சூரியனையும், பிரதி பிம்பசூரியனையுங் கண்டவொருவன் இருவரையுஞ் சூரியர் களாகவேகாணலால், மெய்-பொய் வித்யாசந்தெரியாமல் மய ங்கினனென்றது அமையும். பிரமத்தையும், பிரமத்தின் பிரதி பிம்பத்தையுங் கண்டவொருவன் இருபொருள்களும் பிரமமா கக் காணப்பட்டாலன்றோ இரண்டுபிரமங்களுண்டென்றுமயங் குதல் கூடும்? மெய்யானபொருள் பிரமமாகவும், பொய்யா னபொருள் உலகமாகவுமிருக்கக்கண்ட வொருவனுக்குப் பிரம த்துக்கும் உலகத்துக்கும் வித்யாசந் தெரியாமல் உலகத்தை யும் பிரமமென்றுகோடல் யாங்ஙனமிசையும்? பிரமம் சுத்த சைதன்யமும், அருவமுமாயுள்ளது. உலகம் அங்ஙனமாகாமல் மண்-புனல்-தீ-காற்றுமுதலிய விகாரவடிவமான ஜடமாகவும், உருவமாகவுமுள்ளது. விஜாதியான இரண்டுபொருள்களைக் கண்டு அவைகளை யொரேஜாதியென்று ஒருவன் மயங்கினனெ னல் ஸம்பாவிதமா? ஒருமனிதனையும், ஒருகழுதையையுங் கண்டவொருவன் அங்கிருந்தமனிதனது பிரதிபிம்பமே அவ னோடு கூடவிருந்தகழுதை யென்றுகோடல் மரபாமோ? பிம் பசூரியன் - பிரதிபிம்பசூரியனென் றிவர்பிரஸ்தாபித்ததனோடு பிரமம்-உலகம் என்பவை நிலைபெறுதழிந்தமையால், ஒருவன் உலகத்தைப் பிரமமென்று மயங்கினனெனவும், அதனைப் பிரதி ஷேதித்தற்கே இரண்டாவதுபொரு ளில்லையென்று வேதமறு தியிட்டுரைத்ததெனவும் இவர்தேடிய சமாதானம் வெகுதுச் சமாம். இவர் சமாதானங் கூறும்பொழுதே இவருக்கு நாவ றட்சியுண்டு. சூரியன்-பிரதிபிம்பசூரியனென்று தாட்டியாய்ப் பிரஸ்தாபித்தவர் அதுபோலப் பிரமம் - பிரதிபிம்பமான பிர மம் என்று கூறுதலொழிந்து, பிரமம்-பிரதிபிம்பவுலகம் என்று கூறியது நீதியாமா? அன்றியும், சூரியன் ஒருவனேயுள்ள வன்-இரண்டாவதுசூரியன் கிடையாது என்று தெளிவித்தது போலப் பிரமம் ஒன்றேயுள்ளது, இரண்டாவதுபிரமங் கிடை யாது என்று தெளிவித்திட லாவசியகமாகவும், அங்ஙனந் தெளிவியாது பிரமம் ஒன்றேயுள்ளது, அதற்கிரண்டாவது பொருளில்லையென்று (பிரமத்தைச்சுட்டாமல்) வேதம்விதந் தது என்றிவர் தீட்டியது இவரது ஹேயபுத்தியையேயன்றோ

காட்டியது? இவரது புத்திகோசர மிவ்வளவிலடங்காமல் இன்னுங்கொஞ்சம் அதிகரிக்கின்றது. அதனையுஞ் சற்றுக்கூறுதும்.

சூரியன் மற்றொருசூரியனாகப் பிரதிபிம்பித்தபோது, ஒரு பாத்திரஜலம்-கண்ணாடி முதலிய யாதானுமொன்றிற் பிரதிபிம்பித்திடுவன். அவை யில்லாதபோது சூரியனிடத்துப் பிரதிபிம்பப்பிரசங்கமே கிடைக்கமாட்டாது. சூரியன் பிரதிபிம்பிக்குங்கால், அந்தப்பிரதிபிம்பஸ்தானம் சூரியனைப்போலவே ஸத்தானபொருளாம். அவ்வளவேயன்றிச் சத்தானசூரியனைச் சத்தான கண்ணாடிமுதலியவற்றிற் கண்டவொருவனும் சத்தானவனேயாவன். சத்தானசூரியன் அசத்தானசூரியனைக்கண்டு பிரமித்தவனல்லன். சூரியனுக்குவேறான ஒரு சத்தானபுருடனே அசத்தான சூரியனைக்கண்டு பிரமித்தவன். இவ்வாறு பூர்த்திகட்டியவுபமானத்தோடு இவரது உபமேயத்தை எங்ஙனே இவர் சாதித்திடுவர்? (இவரது ஆபாஸக்கோட்பாட்டுக்கிணைங்க) அத்துவிதமென்ற சொல்லில் இரண்டாவது பொருளைப் பிரதிஷேதித்து, பிரமம் ஒன்றேயென்று வேதமுபதேசித்தது என்றிவர் பிணங்கியுரைத்த பேதைவாதம் ஓங்கித்தலையெடுப்பாய் நசுக்கப்பட்டவாறறிக. இதனால், அத்துவிதமென்னுஞ் சொல்லும்,ஏகமென்னுஞ்சொல்லு மொருபொருளையே சாதித்தற்கெழுந்தனவென் றிவர்நீட்டிய மயக்கவுரையைஇனியிவர் திலதர்ப்பணம் பண்ணவேண்டியதெனலே அமைவுடைத்து.

இதனை யின்னுங்கொஞ்சங் கூறுவாம். அத்துவிதச்சொல்லை யபிமானித்தவாதிகளுள், விசிட்டவாதிகள் "ஒன்றே பிரமம் இரண்டாவது பிரமமில்லை" என்று பிரசங்கிக்குங்கால், இரண்டாவது பிரமமில்லையென்று சாதித்தற் காவசியகமென்னை? பிரமமொன்றேயாகவும், அதற்கிரண்டாவதுபிரம மில்லையாகவும், பிரமத்துக்குவேறான எந்தப்பிரமத்தைப் பார்த்துச் சுரோதா பிரமித்தான்? உள்ளபடியே இண்டாவதுபிரம மிருக்குமாயின், அதனையொப்பவேண்டியதேயன்றி மறுத்தல்கூடாது. இரண்டு பிரமங்களிருந்திடல் அஸங்கதமெனின், இல்லாததை இருந்ததாகக்கொண்டு மறுத்தது கேவலம் அஸங்கதமாம். அன்றியும், பிரமமொன்றேயெனக் கூறியதும், இரண்டாவது பிரமமில்லையெனச் சாதித்ததும் ஒருவாக்கியத்திற்றானே பெறப்பட்டிருத்தல் அதனினுமஸங்கதமாம். முதற்கண்ணுபதேசம்

பெற்ற அதிகாரிக்கு எப்போது பிரமையுண்டாயிற்று? அவ்வுப தேசங் கேட்குமுன்னரே வேறுபிரமத்தைக் கண்டிருந்தால், அது பிரமமன்றுவென்று ஆசங்கையெழுப்புதலும், அதற் கிறைதேடலும் ஸம்பாவிதமாம். பிரமத்துக்குவேறுக மற்றொரு பிரமம் முன்னுமில்லை-பின்னுமில்லை. இதனுல், முன்னுபதேச ங்கருதி ஆசங்கையெழுப்பினுனென லழிந்தது. பின்னுபதே சமு மவ்வாறேதொலையும். அதனுல், பின்னே ஒரு பிரம முண்டாயிடுதலும், அதனை மறுத்திடுதலும் அஸங்கதமாம். இவற்றைநோக்குழி விசிட்டவாதிகள்போக்கு வெறும்போக்கா யழிந்தவாறறிக. இனி அவர்தேடவேண்டிய கதியினை யாமே சிறிதறிவிப்பாம். பிரமத்துக்கு வேறுகப் பசுவும், பாசமும் அந்தப் பிரமமுள்ளபோதே யுள்ளனவாகையால், அவைகளி லொவ்வொன்றைச்சுட்டி, இதுபிரமம் - அதுபிரமம் என்று ண்டாகும் மயக்கறுத்தற்பொருட்டு 'ஒன்றேபிரமம்-இரண்டில்லை' என்றுபோதித்ததாகக் கூறுதலே அமைவுடைத்து. இவ்வாறு கூறுங்கால், பிரமத்துக்கிரண்டாவது பொருள்களாக ஜீவர்களை யும், ஜகத்தையு மொப்பி வெளிவரவேண்டியது ஆவசியக மாயினமையால், இரண்டில்லையென்றவாதம் நசித்தவாறறிக. இதனுல், விசிஷ்டவாதிகளது இன்மைப்பொருள் இறந்தது. இவர்கதியே இவ்வாறுதொலையுமானுல், மாயாவாதிகள்கதியை ச்சொல்லவேண்டுமோ? பிரமத்தைத் தவிர இரண்டாவது பிரமம் அல்லது ஜகஜீவர்களில்லாதபொழுது பிரமையும் - பிரமித்த வஸ்துவும் - பிரமிப்பித்தவஸ்துவுங் கேட்கப்படுமாறு யாங்ங னம்? இவ்வஸங்கதத்தை முன்னரே மறுத்தொழித்தோமாயி னும், ஈண்டுஞ் சிறிதறிவிப்பாம்.

உலகில், ஒருவர் - இருவர் - மூவர் என்று தொடர்ந்து கூறுமாறு (பல்ஸங்கியைகளாகப்) புருடர் விளங்குகின்றனர். இவர்களை நாம் பிரஸ்தாபிக்கையில், ஒருவரிருக்கிருர்-இருவ ரிருக்கிருர் - மூவரிருக்கிருர் என்பனவாதி பிரயோகங்களைச் செய்கிறேம். அன்றியும், வேறு ஸந்தர்ப்பங்களில் ஒருவரிரு க்கின்றுர் - இருவரில்லை என்று பிரஸ்தாபிக்கிறேம். ஒருவரா யும், இருவராயு மிருந்தவர்களை முன்கண்டிருந்த வநுபவத் தால், பின்ஸந்தர்ப்பத்தில் அவ்வாறுகாணப்படாதபோது ஒரு வர்தானிருக்கிருர்-இருவரில்லை என்றுபிரஸ்தாபிக்க நேர்வதே யன்றி வேறில்லை. எப்போதும் ஒருவரேயிருப்பதொழிந்து,

இரண்டாவது புருடரில்லாதபோது (அபாவப்பொருளான போது) இரண்டாவதுபுருடரை யொருகாற்காணுதலும், பின்னரில்லையென்று கூறுதலும் ஸம்பாவிதமாகாது. இவ்வுபமானத்தை யுய்த்துநோக்குவாம். பிரமமும், இரண்டாவதொரு பொருளு மோர்காலத்தி லிருக்குமாயின், அவற்றை யேககாலத்திற்கண்ட வொருபுருடன் பிரமமிருக்கின்றது இரண்டாவது வஸ்துவிருக்கின்றது என்று பிரஸ்தாபித்திடுவன். அவனே மற்றொருகாலத்தில், பிரமத்தைமாத்திரங்கண்டு இரண்டாவது பொருளைக் காணானாயின், பிரமமொன்றேயிருக்கிறது இரண்டாவது வஸ்துவில்லை யென்றுகூறுதல் ஸம்பாவிதமாம். பிரமமே எப்போதுமிருக்கும்பொருளும், இரண்டாவது பொருள் சூனியமுமாகும் பட்சத்தில் பிரமத்தை ஏகமென்றும், இல்லதை இரண்டாவதொன்றுங் கூறுதல் ஸம்பாவிதமாகாது. உள்ளதை ஏகமென்றும், இல்லதைத் துவிதமென்றுங் கூறிய மூன்றாவது பொருளுக்கு (ஒருபுருடனுக்கு) மதன்பர் எங்கேயிடங்காட்டுவாரோ அறியேம். பிரமமொன்றே உள்பொருளும் இரண்டாவதுபொருள் சூனியமுமாகிற பட்சத்தில், பிரமத்தை ஏகமென்றதும், அதனை ஏகமென்றொருவன் சுட்டினனென்றதும் வெறுங் கற்பனையேயாம். வேதமவ்வாறு கூறியதெனின், பிரமத்துக்கு இரண்டாவதாக அவ்வேதம் முளைத்தது பூர்வபட்சியினது அத்துவிதத்திற் கிடர்விளைத்தபடியாம். அன்றியும், சப்தவடிவமாகியவேதம் ஜடமாம். அதனை யொருசேதனனது சம்பந்தம் பெறாதபோது பயனற்றதாகத் தூற்றுதலே சால்புடைத்தாம். அந்தச்சேதனன் யாவன்? அவன் உருவமா? அருவமா? பிரமத்துக்கு வேறா? உடனா? இங்கெழுங்கடாக்களால் பிரமம் குஞ்சுபொரித்து, அதற்கு ஸம்ஸாரம் பலக்கிறதாகையால், மலபத்தஜீவனாகியவதனை நிர்மலத்வா த்யநந்த கல்யாணகுணகணங்களால் ஸாதுக்கள்வந்திக்கும் (ஏகமாகிய) பிரமமென்று பூர்வபட்சி கூறிமகிழ்வது அஸாமஞ்சஸமென்றொதுக்கி இன்புறுவர்பெரியோர். இதனால், அத்துவிதமென்னுஞ்சொல் யாண்டும் ஒன்றென்னும் பொருள்பயவாமையே சாதிக்கப்பட்டவாறறிக.

இவரது சமயவுண்மை யிவ்வளவினதாகவும், அத்துவிதமென்ற சொல்லில் "ஏகமென்றுசுட்டுவதுண்மையின்" என்று விளக்

கிக்காட்டிய குருமொழியை மலையிலக்காகக்கொண்டு எம்மனோரிருக்குங்கடாவை விடுத்தற்காற்றலின்றி, ஏதேதோ கூறி மகிழ்ந்திருக்கிறார். "ஏகமென்று சுட்டுவதுண்மையின்" என்று மறுத்த ஜகத்குருமூர்த்தியின் கோட்டிக்குமே விவாதபூர்விகர்களும், இவரும், இவரினத்துப் பிரகிருதமாயாவாதிகளும் இதுகாறுமெழுப்பிய சித்தாந்தவசனங்கள் யாவை? ஒன்றுமேயில்லை. இது சத்தியமாகவும், இவர் தன்னோடேபோகாமல் பிரமவித்யா பத்திராதிபரைக் குறுக்கேகொண்டுவந்து போட்டுக்கொண்டு, இவரும் அவருங் கொஞ்சிமகிழ்ந்த வார்த்தைகளைத் தமது ஆபாஸச்சுவடியில் பரப்பிக்காட்டி, அதற்கு "அத்துவிதவிசாரம்" என்று தலைப்பெயர்சூட்டி, சிலபக்கங்களை நிரப்பி வெளிவந்தா ரிதென்கொலோ?

இவரது சாஸ்திரியார் (நாவலர்) பிரமவித்யா பத்திராதிபரது அத்துவிதவிசாரத்தில், சில குழப்புவார்த்தைகளே மலிந்துகிடக்கின்றன. எங்ஙனமெனின், "எண்ணுப் பெயர்மேல்வந்த நகரம் அன்மைப்பெயர் மாத்திரையே யுணர்த்திப் பொதுமையினிற்பதன்றி யேனைச் சொற்களின்மேல்வந்த நகரம்போல இன்மைமறுதலைப்பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கணின்மையின் அத்துவிதமென்கின்ற மொழிதானே பிரதிகாரணம் வேண்டாது வேறின்மையை யுணர்த்திநிற்கும்" என்று ஸ்ரீசிவஞானமுனிவ ரெழுதியிருப்பதை யநுவதித்து, எண்ணுப்பெயர் மேல்வந்த நகரம் அன்மைப்பொருளைத் தராது என்று சாஸ்திரியார் பிரசங்கித்து "அஜரா" என்பதுமுதலிய சொற்களையெடுத்துக்காட்டி, அவை அன்மைப்பொருளைத்தந்தில - இன்மைப்பொருளையே தந்தனவென்று மறுத்து, தமது வியாகரணக்கடையை விரித்து வீண்டம்பங்காட்டினர். ஸ்ரீசிவஞானமுனிவர் எண்ணுப்பெயர்மேல்வந்த நகரம் பொதுமையினின்று அன்மைப்பொருளை விளக்குமெனவும், ஏனைய சொற்களின்மேல்வந்த நகரம் இன்மைமறுதலைகளை விளக்குவதுபோல அவ்வெண்ணுப்பெயர்மேல்வந்த நகரம் இன்மை மறுதலைகளை விளக்காதெனவுங் கூறியதனைக் கவனியாதவர்போல இன்மைப்பொருள் கொண்டெழுந்த (எண்ணுப்பெயராகாத) 'அஜரா' முதலிய சொற்களைப் பிரஸ்தாபித்து, ஆடம்பரங்காட்டியதால் அவரதுமதத்திற்கு என்னலாபமோ தெரிந்திலது. இப்போது நேர்ந்தவழக்கெல்லாம் துவிதமென்னுஞ் சொல்லின்மேல்வந்த நகரத்தைப் பற்றியது. இதைச் சாதித்

தற்கு வேறொரு எண்ணுப்பெயரை யெடுத்துக்காட்டி, அதன் மேல்வந்த நகரம் அன்மைப்பொருளைத் தராமல் இன்மைப் பொருளையே தந்தது என்று சாதித்துக்காட்டுவது ஆவசியக மாகவும், அவ்வாறு செய்தலொழிந்து பூர்வபட்சியார் வாளா சொற்சம்பிரமங்காட்டி மகிழ்ந்தது அவருக்கு வெற்றியாவது யாங்ஙனம்? எமது முனிநாதர் கூறியதற்கு ஏகமென்னும் எண்ணுப்பெயர்மேல்வந்த நகரம் இன்மைப்பொருளைத் தராமல் அன்மைப்பொருளையே தந்து, ஏகமல்லவென்று பொருள்கொண்டெழுந்த வாய்மையே சான்றும். ஏகமென்னும் எண்ணுப் பெயர்மேல்வந்த நகரம் அன்மைப்பொருளைவிளக்கி, ஏகமல்ல வென்று பொருள்தந்து நின்றதுபோலவே துவிதமென்னும் எண்ணுப்பெயர்மேல்வந்த நகரம் அன்மைப்பொருளைவிளக்கி, துவிதமல்லவென்று பொருள்தந்து நின்றதெனலே அமைவுடைத்தாம். இதனை மறுத்தாலன்றோ சிவஞானமுனிவரை வியாகரணந் தெரியாதவரென்று இவர் தூஷித்தபெருமை இவருக்குச் செரிக்கும்? ஸத்தானமறுப்பு எழுதவறியாது, தமக்கு வியாகரணமுங் கொஞ்சந் தெரியுமென்பதைக் காட்டிக்கொள்ளவே பக்கங்களைநிரப்பி, பகடிக்கூத்தாடியது வெகுபரிதாபமாம். இவரது வியாகரண வன்மையை யாமறிவோம். பிரஹ்மஸ்ரீ இராமசுப்பாசாஸ்திரியாரதுசிஷ்யர் பிரஹ்மஸ்ரீ இராமசந்திர சாஸ்திரியார் ஒருநவராத்திரி யுத்ஸவத்தில் இராமநாதபுரம்வந்திருந்து வித்வத்ஸபையில் மாயாவாதகண்டநப் பிரசங்கஞ்செய்தபொழுது நமது பிரமவித்யாநாவலர் அவரையெதிர்த்து, தமது அத்வைதத்தை ஸ்தாபித்துக்கொள்ளமாட்டாமலொதுங்கியதை மறந்துவிட்டனர்போலும். இவரையும், இவரதுபத்திரிகையையுங் கொண்டாடிக் கொண்டாடுகின்ற அதிகாரிகள் தடுமாறிப்போமாறு அத்துவிதத்தி னரும்பொருளை எம்மனோர்க்குத் தெளிவித்த ஸ்ரீ சிவஞானமுனிவருக்குத் தெய்வமாகிய எமது கண்மணியைச் (ஸ்ரீமெய்கண்டப்பெருமானைச்) சுட்டி, 'அத்துவிதமெய்கண்டார்' என்று பூர்வீகர்கூறிய அருமையைத்தெளிந்து ஸாதுக்கள் வந்திக்கின்றனர். இவ்வுண்மை கண்டே 'எல்லாப்பாடியக்காரரும் ஐயுறக்கிடந்த அத்துவிதம்' என்று வேதாசலம்பிள்ளையவர்கள் கூறினர். இவரது சுபோதத்தைக் கேட்டு உய்யும்வழிநாடலின்றி, இவரெடுத்துக்காட்டிய மெய்கண்டசாத்திரங்களை இழித்துக்கூறி, அவற்றோடு திருக்களிற்று

ப்படியார் - திருவுந்தியார் என்பவை இணங்கவில்லையென்று
பிணங்கியுரைத்து, வேதமுதலிய கலைகளினும் மெய்கண்டநூல்
கள் அதிகபயனைத் தருவனவென்று கூறியது வேதநிந்தை
யென்று பரிதபித்து நமதன்பர்போட்டவெளிச்சத்தை வைவ
ஸ்வதனே கண்டுமகிழத்தக்கவன். மெய்கண்ட நூல்களோடு
சேராதனவென்று இவர்காட்டிய திருக்களிற்றுப்படியார்-திரு
வுந்தியார் என்பவைகளில் "அது விதுவென்று மவனுனையென்றும்-
அதுநீயே யாகின்றாயென்றும்-அதுவானே-னென்றுந்தமையுணர்ந்தா ரெல்லா
மிரண்டாக-வொன்றாகச் சொல்லுவரோ வுற்று" எனவும், "ஏகனுமாகி
யநேகனுமானவன் - நாதனுமானனென் றுந்தீபற-நம்மையேயாண்டானென்
றுந்தீபற" எனவும் முறையேபோந்த பகுதிகள் ஒன்று-இரண்டு
என்று பிணங்குவாரை மறுத்து, அத்துவிதச்சொல்லை நிறுத்
திய வாய்மையைப் பூர்வபட்சியாரறியாதது அவரதுபாவத்தின்
பயனேயாம்.

மேலே திருக்களிற்றுப்படியார் கூறிய மாவாக்கியங்களை
வருவித்து, எமது திராவிடபாஷ்யமுனிவர் "அது நீயாகின்றாயென
வும், அது நானாகின்றேனெனவும், அது வதுவாகின்றதெனவு மூவிடம்பற்றி
நிகழுந் தத்துவமசிமுதலிய மாவாக்கியங்களைக்கேட்டவழி, அதுவென்பதொரு
பொருள், நீயென்பதொருபொருளாகலின் ஒருபொருண் மற்றொருபொருளா
மாறு யாங்ஙனமென்னு மையநீக்குதற்கெழுந்ததாகலின் அதுவதுவாதற்கேது
வான அவ்விரண்டுமுளதாகிய சம்பந்தவிசேட முணர்த்துதலே அத்துவித
மென்னுஞ் சொற்குப் பொருளென்றுணர்ந்துகொள்க" என்று கூறியத
னால், திருக்களிற்றுப்படியார் ஸ்ரீ மெய்கண்டதேவர் கூறியத
னோடிணங்கவே அத்துவிதத்தி னரும்பொருளை நன்குசாதித்த
தென்று மேலோர்துதித்திடுவர். இவ்வாறு பலபடியா னிரூபிக்
கத்தக்க அத்துவிதத்தினையே ஸ்ரீமெய்கண்டதேவரைப் பின்பற்
றிய எமது உமாபதிசிவம் 'உடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோற்
பிரிவரு மத்துவிதச் சிறப்பினதாய்' என்று கூறி, அத்துவிதமானது
உடலுமுயிருங் கலந்ததுபோலவும, கண்ணொளியுங் கதிரொளி
யுங்கலந்ததுபோலவும், ஆன்மபோதமும்நேத்திரப்பிரகாசமுங்
கலந்ததுபோலவும் பிரசித்தியடைதலைக்காட்டி மகிழ்வித்தன
ரென்றுணர்க. இவற்றையே 'உலகெலாமாகி வேறாயுடனுமாய்' என்று
விதந்தருளினர் ஸ்ரீசகலாகமபண்டிதஸ்வாமிகள். 'உலகெலாமாகி'
என்றதற்கு உடலுயிரும், 'வேறாய்' என்றதற்குக் கண்ணருக்க
னும், 'உடனுமாய்' என்றதற்கு அறிவொளியும் நிதரிசனங்களா

யின. வேதத்தில் "விசுவம் சிவன், விசுவாதிகன் சிவன், விசுவாந்தரியாமி சிவன்" என்று வாக்கியங்கள் பிறந்துள்ளன. இவற்றுள், விசுவம்சிவன்என்பது 'உலகெலாமாகி' என்றதற்கும், 'விசுவாதிகன்சிவன்' என்பது 'வேறாய்' என்றதற்கும், 'விசுவாந்தரியாமிசிவன்' என்பது 'உடனுமாய்' என்றதற்கும் பிரமாணங்க ளாயினவாறறிக. இத்தகையவருமைகளைச் சைவநிந்தையிற்பழுத்த தீயோர்பார்க்க வெழுதுவது எமக்குத் துக்கமாயினும், அவரது தீயபோதத்தான் மயங்கி ஸாதுக்கள் கெடாவண்ணமே எமக்கு இந்தப் பிரவர்த்தக முசிதமாயினவாறறிக.

எமது சைவத்திருவாளர் மகிமையைப் புறச்சமயிகளறியாதது ஸஹஜம். சிவஞானசித்தியாருக்கு உரையெழுதப்புகுந்த வொருபெரியவர் பின்வருமாறு கூறி மரபழித்ததென்னையோ? "இதனுடைய பரபக்கமானது சங்கராசாரியார்செய்த சர்வதரிசன சங்கிரகத்தும், சர்வமதோபந்யாசத்தும், இராமநாதாசாரியர் பண்ணின பரமதநிராகரணத்தும், சர்வான்மசம்பு பண்ணின சித்தாந்ததீபிகையினும், அகோரசிவாசாரியர்பண்ணின சித்தாந்தார்த்தசமுசயத்தும் பார்த்து, அவைகளின் கருத்தைப் பற்றிச் செய்ததெனவறிக" என்றுவிரித்து, சித்தியாரைச் சங்கராசாரியரது நூலில் வியாப்பியமாக்கியது சைவநூலை நிந்தித்ததாகாதோ? ஸ்வமதப்பெரியோர் நூல்களைத் தழுவினரென்பதுகுற்றமன்றாம். சங்கராசாரியர் - இராமநாதாசாரியர் என்னும்புறச்சமயிகணூல்களைச் சித்தியாருக்கு வியாபகமாக்கியது பெருங்கொடுமையாம். சகலாகம பண்டிதஸ்வாமிகள் என்று பிரசித்திவாய்ந்த ஸர்வஜ்ஞமூர்த்தியைக் குறைகூறியது குருபக்தியின் குறைவேயாம். புறச்சமயநூல்களையும், வேறுசில சைவநூல்களையும் பார்த்து, அவரெழுதினரென்று இவ்வுரையாசிரியர் கண்டுகூறியதுஎப்படியோ? தாம் அந்தப்புறச்சமயநூல்களையும், மற்றநூல்களையும் பார்த்தபெருமையைத் தெரிவிக்கவே (சைவாசாரியர் நிந்தையைக் கவனியாமல்) அந்த நூல்களின்பேரைப் பிரஸ்தாபித்தபடியென்று துணிந்திடலே அமைவுடைத்தாம். விரிக்கிற்பெருகும். நிற்க.

நமது பூர்வபட்சியார் வேறு சிலகடாக்களையேவினர். என்னெனின், பலபாடியக்காரரும் அத்துவிதமென்னுஞ் சொல்லில்வந்த நகரத்துக்கு இன்மைப்பொருள் கூறவும், மெய்கண்டார்மாத்திரம் அன்மைப்பொருள் கூறியது கனம்பெறாதெனவும், வேதம் - புராணமுதலியவற்றில் பிரயோகித்திருக்கும்

அத்துவிதம் இன்மைப்பொருளையே பயந்துவிளங்குகின்றன வெனவும், இவற்றிற் கென்னசமாதானமெனவும் ஆசங்கித்த தேயாம். பலபாடியக்காரரும் இன்மைப்பொருள் கொண்ட தனால் இவருக்கென்னலாபம்? அவர்கொண்ட இன்மைப்பொருளால் சங்கரரைப்போல அன்னோர் ஜகஜீவர்களை நிஷேதித்ததுண்டா? ஜகஜீவர்களை நிஷேதித்ததென்று யாம் எதிரிமதந் தழுவிப் பிரஸ்தாபித்ததேயன்றி வேறில்லை. அவர் நிஷேதித்தது ஜகத்து-பரம் என் வைகளையே யாம். ஜகஜீவபரங்களாகிய மூன்றுபொருள்களையுஞ் சத்தென்றுகொண்ட ஏனைய பாடியக்காரரைப்போலவே மெய்யுரைத்தருளிய சைவத்திருவாளர் மதம்பற்றிவாழு மெம்மனோர் எல்லாப்பாடியக்காரரையும், ஸ்ரீ மெய்கண்டதேவரையும் விரோதித்தெழுந்த சங்கராசாரியரை உண்மைகண்டவரென்று யாங்ஙனந் துணிந்திடுவர்? சங்கரர் நீங்கலான பாடியக்காரர் அகரத்தில் இன்மைப்பொருள்கொண்டு தவறினும், உண்மைப்பொருள்களாகிய பதிபசுபாசங்களையொப்பி ஸ்ரீ மெய்கண்ட ஸ்வாமிகளோ டிணங்கி வாழ்ந்தாராகையால், இவர்களையதிக்ரமித்து பொய்கண்டதேசிகராய்த் தோன்றிய புண்யஜநசிரேஷ்டரை நமதன்பரும், அவரது சாஸ்திரியாருமே மெச்சிவாழட்டும். பூர்வபட்சி யேவிய கடா அவரையே திருப்பிக்கொண்டதற்கு யாரென்னசெய்யலாம்? சங்கரர் நீங்கலான ஏனையபாடியக்காரர் அத்துவிதமென்னுஞ் சொல்லுக்கு இரண்டாவதில்லாத ஏகம் என்று துணிந்தபொருள் பிரமத்தைப்போல அதற்கிரண்டாவது பிரமமில்லையென்று நிச்சயித்த வாய்மையினதாம். அவ்வளவேயன்றிப் பிரமத்திற்கிரண்டாவதாக ஜீவனில்லை-ஜகத்தில்லையென்று தப்புப்பாடம்படித்துத்தடுமாறியதில்லை. வேதத்தில், "అజామేకాం" என்றும், "ద్వాసుపర్ణా" என்றும், "జ్ఞాజ్ఞౌద్వౌ" என்றும் பலவசனங்களெழுந்து பதிபசுபாசங்களாகிய சத்தியப்பொருள்களை ஸ்தாபித்த துணர்ந்தவர்க்குச் சங்கரமதம் அசங்கரமதமாகவே தோன்றி, விரஸமாமென்க. இவ்வுண்மைகளைப் பரியாலோசியாமல், கீழ்களுக்காகப்பிறந்த (பக்குவ ஹீனர்களுக்காகப் பிறந்த) சில ஸாமான்யோபநிஷத்துக்களாகிய குப்பைகளிற்பொறுக்கி, ஜகஜீவபரங்களை மிச்சையென்று அவை சாதிப்பதாக மயங்கி, வேதாதிகளில் அதவைதசொல் இன்மைப்பொருளையே தெரிவிக்கின்றது என்று தெளிவின்றியெழுதியது அலங்கத

மாகவே ஒழித்திடுவர் மூதியோர். இவர் வேதாதிகளில் தேடியெடுக்கும் இன்மைப்பொருளால் அத்துவிதச்சொல் இவரைக் கனப்படுத்தாமலொதுக்கியதை ஏனையபாடியக்காரரபிமதங்காட்டி மேலே விளக்கியதன்றியும், இவர்காட்டிய இடங்கடோறும் அத்துவிதச்சொற்கு அன்மைப்பொருளையே சாதிக்கயாம் சித்தமாயிருக்கின்றோமாகையால், "கடவுளேயில்லை" என்று ஒருமூலையில் போதிக்கும் வேதம்சொல்லிவிட்டதென்று அநதிகாரியாகிய இவரோடொத்த ஸாமானியருக்காகப் பிறந்த ஏகான்மவாதத்தை (அசம்பிரமவாதத்தை) நம்பி, இவராரவாரித்தது எமக்கு வெகுதுச்சமாமென்க. இதுகாறுங் கூறிய நியாயங்களால் பூர்வபட்சிமதம் அடங்குமாறு அத்துவிதமானது சைவபட்சமாகச் சாதிக்கப்பட்டதே போதுமாயினும் இன்னுங்கொஞ்ச மிசைத்திடுவாம்.

சுருதி "శివమద్వైతంశాంతంచతుర్థంమన్యన్తే" என்று பலவிடங்களில் கோஷிக்கின்றது. இந்தவாக்கியத்தில், அத்வைதத்துக்கு முன்னே "ఏకమేవ" என்பது காணோம். ஒன்றேயுள்ளது இரண்டாவதில்லையென்று சொல்லவேண்டியது நியதமாயின், இந்த வாக்கியமும் அவ்வாறு போதிக்கவேண்டும். பூர்வபட்சிக்கு இது இடரையேவிளைத்தது. இன்னும், మహాదేవం-భస్మోద్ధూళితవిగ్రహం-హిరణ్యనిధిం-అద్వైతం-చతుర్థం-బ్రహ్మవిష్ణురుద్రాతీతం-ఏకమాశాస్యం-భగవంతం శివంప్రణమ్య" என்று கூறியசுருதியிலும், அத்வைதசப்தத்திற்குமுன்னே ஏகம்காணோம். அத்வைதசப்தத்திற்கு நெடுந்தூரத்தில் ஏகமிருக்கின்றது. ஒன்றேயுள்ளது – இரண்டில்லையென்று இந்தவாக்கியத்தொடர் போதியாமையால், சங்கராதுபிமதம் சுருதிவிரோதமாகின்றது. இரண்டல்லாதது-ஒன்றுயுள்ளது என்று கூறும்பொருள் நிர்ப்பாதிதமாயிடுதலறிந்து ஸாதுக்கள் குணப்படுவரென்க. இவ்வுண்மைதெளியாமல், பிரமவித்யாநாவலரெழுதிய "அத்துவிதவிசார"த்தைத் துலைத்து, எமதுநாயகரவர்கள் செய்திருக்கும் "அத்வைதசப்தப் பிரகாசிகை" என்னுநூலை யாம் விரைவில் வெளியிடுவோம்.

இனி வேதமுதலியகலைகளினும் மெய்கண்டநூல்கள் அதிக பயனைத் தருவன வென்றதுங் குற்றமாகாது. பொன்னினும் பூஷணஞ் சிறந்ததென்பது குற்றமாமோ? நூலினும் ஆடைசிற

ந்ததென்பது நூலைத் தூஷித்ததாகுமோ? "வேதம் பசுவதன்பால் மெய்யாகமநால்வ - ரோதுந்தமிழதனினுள்ளுறுநெய்-போதமிகு - நெய்யினுறு சுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான் - செய்ததமிழ்நூலின்றிறம்" என்ற அபியுக்தர் திருவாக்கைக் கடைப்பிடித்து, அன்புமேலீட்டினுல் மெய்கண்டநூல்களை ஸாதுக்கள் வியந்துதுதிப்பதுகுற்றமாயினதில்லையறிக இந்த அவசரத்தில் வேதம் ௪, அங்கம் ௬, நியாயம் ௧, மீமாஞ்சை ௧, புராணம் ௨, ஆகப் பதினுன்குவித்தைகள் பூஜ்யமாயுள்ளவை என்று புகழ்ந்து, அவை தமக்கே சொந்தம்போல அபிநயித்து மகிழ்ந்தனர். அப்படியாயின், வேதம் ௪, அங்கம் ௬ என்று கணக்கெழுதியவாறு ஏனைய சாஸ்திரங்களையுந் தனித்தனி இத்தனையென்று விவரமெழுதி, பதினுன்குக்குமேல் வித்தைகள்விரிந்துகிடப்பதற்கு நியாயங்கூருதது என்னை? வேதம் நான்குஎன்றபடிப் புராணம் பதினெட்டு என்று யாவருமறிவார்கள். வேதத்தை நான்குஎன்று விரித்ததுபோலப் புராணம்பதினெட்டு என்று விரித்தாவது, புராணத்தை ஒன்று என்று சுருக்கியதுபோல வேதம் ஒன்று என்று சுருக்கியாவது கணக்கேற்படுத்தல் மரபாகவும், அவ்வாறு செய்யாததென்னை? பூர்வ மீமாம்ஸை – உத்தர மீமாம்ஸை-அஷ்டாதச ஸ்மிருதி - நியாய சாஸ்திரத்வய முதலிய யாவும் சிவாநுக்ரஹ மெய்திய பசுக்கள் கூறினவையேயாம். இவைகளைக் கௌரவித்துவிட்டு, இவற்றினுக்கு எத்தனையோமடங்கு உயர்நலமெய்திச் சிறந்தனவாகிய மெய்கண்டநூல்களைப் பூர்வபட்சியார் தூஷித்தது பாபக் கலிகாலப்பண்பின் பயனேயாம். இவரீண்டு மெச்சிய வித்தைகளைச் சமயம் வாய்த்தபோது இவரே மிச்சையென்றுகூறி, உள்ளம்வெதும்புவர். அவற்றினைச் சத்தியமெனக்கொண்டுவாழுஞ் சமயிகள்பலருளர். அன்னோரவைகளைப் புகழ்வதே அவற்றிற்குப் பெருமையாம். அஸத்வாதியாகிய இவர் மெச்சியது வெகுதுச்சமாம். மெய்கண்டநூல்களை வந்திக்கும் யாம் ஷை வித்தைகளைவெறுத்து, உள்ளம் வெதும்பி ஒதுக்ககிலேமென்க. எல்லாப் பிரமாணங்களையுந் தாரதம்யமாகக் கொண்டொழுகும் எம்மனோரியல்பினையறியாதது இவரது குறைந்தகுணத்தின் பயனேயாம். இதனையிம்மட்டினிறுத்தி வேறுவிஷய மொன்றினை இனி விசாரித்திடுவாம்.

## பூர்வபட்சம்.

'மெய்கண்டார் முதலாயினோர் பந்தத்தை அல்லது மாயையினை நித்தியமென்று அதாவது சத்தியமென்று கொண்டவர்கள். எது சத்தியமோ அது ஞானத்தால் நிவிர்த்தியாகாது. கிரியையினாற்றான் நிவிர்த்தியாம். எது அசத்தியமோ அது கிரியையினால் நிவிர்த்தியாகாது, ஞானத்தினாற்றான் நிவிர்த்தியாம். சத்தியமான அரவொன்று நிவிர்த்தியாக வேண்டுமானால் அது தடிகொண்டடித்தலாகிய கிரியையினால் ஆகவேண்டுமேயன்றி ஞானத்தால் நிவிர்த்தியாகாது. அசத்தியமான அரவொன்று அதாவது கயிற்றினிடத்துத் தோன்றும் அரவொன்று நிவிர்த்தியாகவேண்டுமாயின் அது கிரியையினால் நிவிர்த்தியாதலின்று. பின்னைக் கயிற்றைத்தவிர அரவில்லையென்று தெளிந்தஞானத்தாலேதான் நிவிர்த்தியாகின்றது. இங்ஙனமே மாயை - மாயாகாரியமானபந்தம் சத்தியமாயிருக்கும்பட்சத்தில் அதை நிவிர்த்திக்க ஞானம்எதுக்கு? கிரியைதான்வேண்டும். இவ்வாறுயின் பந்தத்தைச் சத்தியமாகக்கொள்வோர் ஞானத்தை யேன்விரும்பவேண்டும்? இதனால் மெய்கண்டாராதியோர்க்கு ஞானமின்றென்பது குன்றின்மேலிட்ட விளக்காயிற்றென்க.'

## சித்தாந்தம்.

இந்தப் பூர்வபட்சிக்குப் பந்தம் இன்னதென்று தெரியாது. மாயையினைப் பந்தமென்று மயங்கிக்கூறினார். ஆணவபாசமே பந்தம். மாயையானது அவ்வாணவபாசத்தைப் பேதிப்பது. ஆணவம் அறிவைமறைக்கும். மாயை அந்தமறைப்பைத்தவிர்க்கும். இவ்வுண்மையினையே "மாயாதநுவிளக்காய்" என்றருளினர் எமது அருளாளர். சுழுத்தியில் அறிவுதோன்றாதிருப்பது ஆணவத்திற்கும், அவ்வறிவு தோன்றவேண்டித் தேகேந்திரியாதிகளைப் பரமன் கூட்டியுபரித்து ஜாக்ரத்தையுண்டுபண்ணியது மாயைக்கும் நிதரிசனங்களாயின. மாயாகாரியமான முப்பத்தாறு கருவிகள்சூழ ஆன்மா அரசுபுரிவதே ஜாக்கிரம். அறிவற்று ஆணவம் அல்லது மூலமலத்தில் ஆன்மாகிடந்தது கேவலாவத்தையென்றும், மாயையின்காரியமாகிய பூதம் - பொறி - புலன் கரணமுதலியவற்றோடு சேர்ந்து உலாவிவருதல் சகலாவத்தையென்றும் உண்மைநூல்கள் கூறும். இவ்வாறு அறியக்கிடந்த ஆணவமாயைகளின் வித்யாசந்தெரியாமல் ஆவேசங்கொண்

டெழுந்த பூர்வபட்சியின் புத்திக்கு வியசனப்படுகின்றனர் பெரியோர். இன்னுமவர் சத்தியம்-நித்தியம் என்னுஞ்சொற் களின்பேதமறியாதுமாழ்கினர். இவருக்குச் சத்தியம்-நித்தியம் என்னுஞ் சொற்கள் ஒருபொருளேயே தருவனவாகக்கருத்து. அங்ஙனமாகாது. சத்தியமென்பது ஒருபொருளின் இருப்பை யும், நித்தியமென்பது அதுயாண்டும் மாறுமல் ஒருபடித்தா யிருப்பதனையும் உணர்த்துமியல்பினவாம். மாயை சத்திப் பொருளே. அது நித்தியப்பொருளாகாது. "புல்லாகிப்பூடாய்ப்புழுவாய்" மரமாகி என்றதுமுதலிய விகாரவடிவங்களையும், பூதம் - பொறி என்பனவாதி வஸ்துபேதங்களான திரிவினையு மெய்தி மாறிக்கொண்டேவருந் தன்மையுண்மையால், நித்தியம் என்னும் பெயர் நிலைக்கமாட்டாது. மாயாகாரியமான இந்தப் பேதங்களைச் சிவனுயிர்களுக்கு உண்டுபண்ணிக்கொடுத்தலே அவரது சிருட்டியாம். அந்தப்பரமேசுவரர் மாயையைச் சிருட் டித்திலர். அந்தமாயையில் உலகமுதலிய காரியபேதங்களையே சிருட்டித்தனர். இந்தமாயையானது ஸ்ருட்டிஸ்திதிலயங்களை அடைதலால், இவைகளையே (இந்தமாற்றங்களையே) அநித்த மென்றுகூறும் ஆகமங்கள். ஆணவம் சத்தியமாய், நித்தமாய், ஏகமாய் அறியாமையாய் நிற்பதொன்று. இதனை மாயையால் பேதித்து (உயிர்களுக்கு) ஒழிப்பதொழிந்து வேறொன்றுஞ் செய்திலர் சிவபரஞ்சுடரென்றறிக. இவ்வாறு வியவஸ்தைப் பட ஆணவமாயைகளினிலக்கணங்களை மேலோர்வாய்க் கேட் டுத்தெளியு மறிவொழிந்து, மனம்போனவாறெல்லா மெழுதி வரம்பழிப்பது நமதன்பர்க்கு ஒருதுக்கத்தையும் பயவாதோ? இனியேனும் உய்யும்வழி தேடுவாராக.

## அநுவாதபூர்வபட்சம்.

பந்தம் சத்தியமாயின் அதுஞானத்தா லொழியாது, அத னைக்கிரியையினுல் ஒழிக்கவேண்டும், நிஜமானபாம்பைத் தடி கொண்டடித்தலாகிய கிரியையினுற்போக்குவதன்றி ஈண்டுப் பாம்பு ஒழிந்தது என்று எண்ணுதலாகிய ஞானத்தால் அது ஒழியமாட்டாது.

## சித்தாந்தம்.

இவருக்குப் பந்தலட்சணந் தெரியாமையை மேலேதெரி வித்தாம். பின்னர், கிரியைஞானங்களைச் சிறிதுபேசினர். இது

வும் இவரது மயக்கவறிவின்பாலெழுந்த வார்த்தையேயாம். பாம்பைத் தடிகொண்டு அடிப்பது கிரியையேயன்றி ஞானமன்றெனப் பேசியது இவருக்கு ஞானமில்லையென்பதனையே தெரிவிக்கின்றது. தடியாலடித்தால் பாம்பு இறக்குமென்றும், அவ்வாறு அடித்தல் தலையைப்பார்த்து அடிக்கவேண்டுமென்றும் யோசிப்பது கிரியையா? ஞானமா? அதன்றலைமேல் தடிகொண்டடிக்கையில், அடித்தலாகிய கிரியையோடு ஞானமுங் கலந்திருக்கிறதா? இல்லையா? ஞானமின்றி இவர்கண்டவிடத்தி லடித்தால், அந்தப்பாம்புசீறித் தலைதூக்கி இவர்மேல்விழுந்து கடித்து, இவரைக் கொல்லாமற்போகுமா? ஞானமுங் கிரியையுங் கலந்து பயன்படுவதனையே பாம்பைக்கொல்லுதற்கு ஆதாரமென்று அறிஞர்தெளிந்திடுவர். ஞானம்-கிரியை என்பன சக்திகள் இவ்வாறுகேடால் சைவசித்தாந்திகள் துணிவாம். பூர்வபட்சியினதுமதத்தில் சக்தியென்றுகூறாமல், அதுவே ஒரு முதலென்றுகூறுவர். ஞானத்தைச் சக்தி அல்லது குணமாகவும், அந்த ஞானத்தினையுடையமுதலைச் சக்தன் அல்லதுகுணியாகவுங்கூறாமல் ஞானத்தையே முதலென்றுகூறுவர். அவர் மதத்தில் ஞானமேபிரமம் அல்லது அறிவேபிரமம் என்றுகூறுவது அநாதிவழக்கு. சைவசித்தாந்தத்தில், ஞானமானது சக்தி அல்லது குணமென்றும், இந்த ஞானத்தைப்போலவே கிரியையானது சக்தி அல்லது தொழிலென்றுங்கூறுதல் மரபாம். சுருதி "परास्य शक्तिर्विविधैव श्रूयते-स्वाभाविकी ज्ञानबलक्रिया च" என்று கூறியதில், பரனது ஞானக்கிரியைகள் வெளிப்பட்டன. இந்த முடிவால் பரனை ஞானக்கிரியாஸ்வரூபன் என்று சைவசித்தாந்திகள் துணிந்துகூறுவர். மற்றமதத்தவர் தங்கள் கடவுளை ஞானக்கிரியாஸ்வரூபனென்று கூறும்வழக்கின்று. ஞானக்கிரியைகளைப் பரனதுசக்திகளாக வொப்பாதமதங்கள் கேவலம் அவைதிகமேயாம். அவைதிகருள், தலைமைபெற்ற மாயாவாதிகள் குணகுணிபேதமில்லையென்பது வெறும் வாசாஞானமேயன்றி வேறில்லை. எந்த மாயாவாதியாவது என்சக்தி - என் அறிவு - என்றொழில் - எனது ஸாமர்த்தியம் என்று சிற்சில சமயங்களில் சொல்லிக்கொள்ளாம லொழிகின்றானா? இந்த நண்பர்தாமும் வாளாவொழிகின்றாரா? பாம்பையடித்தற்கு ஞானம்வேண்டியதில்லை-கிரியையேவேண்டியது என்றுபேசித் தமது மதத்தின்வாயில் மண்விழச்செய்தா ரிதென்கொலோ?

அன்றியுமிவரது ஆபாஸச்சுவடியி னோர்மூலையில் பிரமத்தின் சத்தி மூலப் பிரகிருதியென்று மொழிந்தனர். விவர்த்தவாதியாகிய இவர் அவற்றையெல்லாந் தொட்டுக்கொண்டு, தமது குருவாகிய சங்கராசாரியருக்கு நாமம்போட்டது வெகுபரிதாபமென்க. "இச்சா ஞானக் கிரியையென் றிசைக்கும் - சத்திகளுளை யுளதத்திறமெமக்கே" என்று எம்பெரியார் பணித்தவாய்மையால், ஞானக்கிரியைகள் சிவசீவர்களிருவர்பாலும் அமையக்கிடத்தல் சித்தித்தது. ஞானமும், கிரியையும் சிவசீவர்களிருவர்க்கும் குணமுந்தொழிலுமாதலை யொப்பாத நண்பர் கிரியை - ஞானம் என்னுஞ்சொற்களைக் கையாண்டது கேவலம் அஸங்கதமாம். ஞானத்தைக் குணமாகவுடையது ஒருமுதலென்று கொள்ளாமல், அஞ்ஞானத்தையே ஒரு முதலென்று துணிந்ததுபாவம், நிற்க. இவர் கிரியையென்னுஞ் சொல்லையாண்டது எப்படி? ஞானத்தைப்போல இவர்மதத்தில் கிரியை ஒரு முதலா? இந்தக்கிரியை எங்கிருந்துமுளைத்தது? இவர்மதத்திற் கிடர்விளைத்து நிர்மூலப்படுத்து மெமதுகிரியையை இவராதரித்தது விளக்கில்வீழ்ந்தழிந்த விட்டிலின்கதியையே வெளிப்படுத்தியதென் றுணர்க. இனி ஞானம் ஒருமுதலேயென்று தாபிக்குமிவர்மதத்தில், அந்தஞானந்தானே பிரமப்பொருளாம். ஞானத்தையுடையதுபிரமம் என்று அவர்கூறார். அங்ஙனமாயின், கோபம் ஒருமுதலா? கோபத்தையுடைய ஒருபுருடனே முதலென்று யாவருங்கொண்டிடுவர். இப்படியே அகங்காரம் ஒருமுதலா? அதனையுடையவொருபுருடனே முதலாவன். அவனுக்குக் கோபமும், அகங்காரமும் அவனது தீயகுணங்களாம். அவன்பாலியையத்தக்க சாந்தி - தாந்தி - உபரதி - திதீட்சை முதலிய நல்லகுணங்களையும் மேலோர் புகழ்ந்திடுவர். இவரது பிரமமாகிய ஞானமே ஒருமுதலாகட்டும். அதனிடத்து அஞ்ஞானப்பிரசங்கங் கிடையாது. கிடையாதபோது விவர்த்தமாகவாவது அஞ்ஞானம் - சீவன் - உலகம் முதலிய விவிதப்பிரசங்கத்துக்கு இடமுண்டானவாறு எப்படி? நமதன்பரையே அதற்கு அதிஷ்டானமாகவைத்து விசாரிப்பாம். இவருக்குக் குரோதமுதலிய தீயகுணங்களும், சாந்தமுதலிய நல்லகுணங்களு மிருக்கலாம். அன்றியுமிவர் தேகச்சுமையைச் சுமந்துழல்கின்றார். அந்தத்தேகத்தில், கண் - காது - மூக்கு - வாய் - மனம் - புத்தி - சித்தம் முதலிய கரணங்கள் அமைந்துகிடக்கின்றன.

கண்ணாலொன்றினை இவர்பார்க்கிறபோது காதுகேளாது.காதா லொன்றினை இவர்கேட்கிறபோது கண்காணாது. இப்படியேபிற வற்றினுங்காண்க. கண்-காது-மனம் முதலிய கரணங்கள் ஒன் றையறிகையில் அவை தாமே அறியா. கண்ணிலே கலந்துகண் டும், காதிலேகலந்து கேட்டும், மனதிலேகலந்து நினைத்தும், பிறவிந்திரியங்களிலே கலந்து நுகரவேண்டியவைகளை நுகர்ந் தும் அறிவு அல்லது பிரமமேயன்றோ இவர் சித்தாந்தப்படித் தலைப்படுகின்றது? அறிவாகிய பிரமத்திற்கு இந்திரியகரணங் களின்சேர்க்கை எற்றுக்கு? இவற்றின் சகாயமின்றித் தானே யறியமாட்டாத (பிரமமாகிய) நமதுநண்பர் தமதுசொரூபம் அறிவு என்று சொல்வதைக்காட்டிலும் ஒரு அவமானம்வேண் டுமா? அகண்டமென்றுகூறும் இவரதுபிரமம் அல்லது அறி விற்குக் கண்ணின்வழியாக ஒன்றினைக்காணும்போது காதுமுத லியனபாழ்த்தும், காதின்வழியாக ஒன்றினைக்கேட்கும்போது கண்முதலியனபாழ்த்தும், மூக்கின்வழியாக ஒன்றினைமுகரும் போது ஏனையெல்லாக்கரணங்களும் பாழ்த்துந் தலைதடுமாறிப் போவது என்னையோ? இந்திரிய கரணங்களின்சேர்க்கையின்றி ஒன்றினையறியுஞ் சக்தியொழிந்து, ஏககாலத்தி லெல்லாக்கர ணங்களிலும் விரவி, அக்கரணவிடயங்களை யொருங்குணருந் தன்மையிழந்திண்டாடும் இவரதுஅறிவைப் பிரமமென்றும், அவ்வறிவின்றன்மையை நிர்மலமென்றும் விவேகிகளொப்பு வார்களா? அறிவென்று தன்னைக்கூறிக்கொள்ளும் இவரது அறிவு நிர்மலமன்றாம். அழுக்குப்படிந்ததொன்றாம். அவ் வழுக்கே ஆணவமலமாம். இந்தவிசேடத்தால் இவர் அறிவு என்றுதுணிந்தபொருளை மலினசேதனம் அல்லது அசுத்த அறிவு என்றுதெளிந்து,அவ்வசுத்தவறிவுக்குப் பிரமமென்னும் பெயரைப்போக்கி, ஜீவனாகியவதனைக் கழுதை-குதிரை-நாய்- பேய் முதலிய ஜந்மங்களி லுழல்வதொன்றாகத்துணிந்து பரிக சித்திடுவர்மேலோர். இந்தச்சீவனுக்குத் தேகேந்திரியாதிகளை மாயையிலேநின்றுங் காரியப்படுத்திப் பரமன்கொடானாயின், இதனறிவு வெளிப்படுமேதுவே இல்லாமற்போகுமன்றோ? இவ ற்றின் சேர்க்கையினாலேயே (மாயையின்சேர்க்கையினாலேயே) அறிவுநிகழுமென்பதற்கு, முப்பத்தாறு கருவிகளோடுகூடிய ஜாக்ரத்தில் அறிவு அதிகரித்தும், பத்துக்கருவிகள் குறைந்த அவசரத்தில்(ஸ்வப்நத்தில்)சிறிது அறிவுகுறைந்தும்,பின்னுங்

கருவிகள் குறையக்குறைய அறிவுங்கூடவேகுறைந்தும், கருவிகளின்சகாயஞ் சிறிதுமில்லாத சுழுத்தியில், அறிவின் ஸ்புரணம் சிறிதும் வெளிப்படலின்றி அறியாமையேதலைதூக்கி, நமதன்பருக்கும், அவரினத்தவர்க்கும் ஆணவாத்துவிதஞ் சிறந்திடல் அநுபவஸித்தம். இந்தப்பாகுபாடறியாது,மாயையினைப் பந்தமென்றுகூறிய இவருக்கு ஆணவபந்தம்நீங்குவது கஷ்டதரமென்க. ஸஹஜமாகிய ஆணவபந்தம் செம்பிற் களிம்புபோலவும், பரனுபகரித்த ஆகந்துகமாகிய மாயையின் சம்பந்தம் செம்பிலேறிய களிம்பைத்தவிர்க்கும் புளிபோலவும் அறிதல் மரபாகவும், அறிவைமறைத்த ஆணவம்போலாது, அவ்வறிவினை வெளிப்படுத்திய மாயையினைப் பந்தமென்று நமதன்பர் கூறியது சைவநூல்களைத்தூஷிக்கும் பாபத்தின் பயனேயாம்.

அநுவாதபூர்வபட்சம்.

“அசத்தியமான அரவொன்று அதாவது கயிற்றினிடத்துத் தோன்றும் அரவொன்று நிவர்த்தியாக வேண்டுமாயின் அதுகிரியையினால் நிவிர்த்தியாதலின்று, பிள்ளைக்கயிற்றைத் தவிர அரவில்லையென்று தெளிந்த ஞானத்தாலேதான் நிவிர்த்தியாகின்றது.”

சித்தாந்தம்.

இவர் கயிற்றரவைப் போக்குதற்குக் கிரியைவேண்டியதில்லையென்றும், ஞானமே வேண்டற்பாலதென்றுங் கூறியது பிராந்திவார்த்தையாம். கயிற்றரவைக்கண்டதும், அதனை இல்லையென்று கழித்ததுங் கண்ணின்றொழிலேயாம். இந்தக்கண் மங்கலாயிருந்தபோது பாம்புதோன்றியது. அந்தமங்கல் நீங்கியபோது பாம்பு ஒழிந்தது. பாம்புதோன்றியபோது பார்வை மட்டாயும், அது ஒழிந்தபோது பார்வை தெளிவாயுமிருப்பது ஸஹஜம். மட்டாயிருந்தகாலத்தில், பாதிகண் மூடப்பெற்றும், தெளிவாகுங்காலத்தில், முழுக்கண் திறந்து மியங்குதல் சித்தம். பொய்ப்பாம்பு தோன்றியபோது கண்ணைமூடியதும், அது ஒழியவேண்டிக் கண்ணைத்திறந்ததும் ஞானமா? கிரியையா? ஞானமேயென்று இவர்கூறியதழிந்து, ஞானமுங்கிரியையுங் கலந்தகாட்சியே நிலைபெறுயிற்று. கண்ணைத்திறந்து பார்த்தலாகிய கிரியையொன்றினானே அது அமையாமல், தீபமேற்றிக்கொண்டுவந்து கண்ணுக்குக்காட்டுதலாகிய கிரியையையு

மபேட்சிக்கும். இந்த நுட்பமுணர்ந்தால், அஞ்ஞானச்சேற்றிலழுந்திக்கிடக்கும் இவர் ஞானம் ஞானமென்று வாய்ப்பறை அறையார். இவரதுஞானம் அல்லது கடவுள் (பிரமம்) தனக்கு இரண்டாவதுபொரு ளில்லாதது. அதனாலதற்குத் தேகாதிகளில்லை. இல்லாதபோது அவ்வறிவாகிய தெய்வம் தனித்து நிற்கவேண்டும். அவ்வறிவைத் தனிப்பொருளாகக்கண்டவரும், காட்டவல்லவருமுண்டா? அவ்வாறுகாணப்படாத பிரமம் அறிவாயிருந்தாலென்னை? அறியாமையாயிருந்தாற்றானென்னை? அன்றியும், உள்பொருளாயிருந்தா லென்னை? அல்லது இல்பொருளாய் (சூனியப்பொருளாய்) ஒழிந்தாற்றானென்னை? அதனை அறிவு என்றுகூறியது சாட்சியற்றதாம். அறியாமை, அறியாமையோடுகூடிய வொருபொருள் என்னும் வேறுபொருள்கள் அவ்வறிவிருந்த காலத்திலேயே கேட்கப்படின் அறியாமைக்கும், அவ்வறியாமை யோடுகூடிய பொருளுக்கும் வேறாகச் சுத்தஅறிவான பிரமமொன்றிருப்பதாகத் துணிந்திடல் சாலும். இரண்டாவதொருபொருளு மில்லையென்று பேசும் அவர்கூற்றினை யாந்தழுவின், இப்போது காணப்படுந் தேகேந்திரியப் பிரபஞ்சாதிகள்யாவும் ஒன்றாகிய அப்பிரமத்தின் விகாரமேயாய் (சொரூபமேயாய்) பிரமம் நிர்விகாரம்-நிர்மலம் என்பதழிந்து நிர்மூலமாய்ப்போம். தேகேந்திரியாதிகள் அறியாமையைப் போக்குவதற்கியைந்த கருவிகளாயினது சித்தமாகையால், தேகேந்திரியாதிகளாகவோ, தேகேந்திரியாதிகளோடு கூடியோ நிலைமாறிப்போன பூர்வபட்சியினதுஅறிவு - அல்லது தெய்வத்தை ஆணவமலம்விழுங்கி யேப்பமிட்டகதையை எவரும்யோசிக்க இடந்தந்தது. இதனால், பூர்வபட்சியினது தெய்வம் எமது ஜீவஸ்தானத்தில் நிலைபேறாய் நிற்கின்றது. தனித்துநின்று ஒன்றினையறியும் வகையிழந்த இவரது பிரமத்துக்கு (எமது ஜீவனுக்கு) தேகேந்திரியாதிகளே அறிவைச் சிறிதுவிளக்கியதெனல் சாதிக்கப்பட்டமையால், அத்தேகாதிகளி னியக்கமாகிய கிரியையைப்பழித்து, இவர்இருள்-அல்லது அஞ்ஞானமென்னு மோர்பொருளிருப்பதாக வநுபவியாதவர்போல ஞானமே பொய்யரவை யொழித்தற்குப் போதுமென்றுதருக்கியது இவரது அஞ்ஞானத்தின் பயனேயாம். ஒருவனது கண்மயக்காற்றோன்றிய கயிற்றரவு போல, பிரமத்தினது கண்மயக்காற்றோன்றிய கயிற்றரவுயாது?

கண்ணேயில்லாத பிரமத்துக்குக் கயிறும், கயிற்றரவுந் தோன்றுமா? தோன்றுதபோது அதற்குப் பயகம்பனுதிகளும், அதை நிவிர்த்தித்துக்கொள்ளும் ஸாதனமுமாகிய கிரியைகளெற்றுக்கு? இவரொழுங்காய்ப் பிரமத்தினது கதியையும், ஸ்திதியையும் காட்டவகையறியாமல், அதனைக்கொண்டுபோய் ஜீவப்படுகுழியிற்றள்ளி, அங்கிருந்துகொண்டுபோய் நிரயக்கண்காட்சிசாலையிலே நிறுத்தி, அங்குள்ள அட்டை - அரணை - தேள் - பாம்பு - செய்யான் முதலியவை கடிக்கவிட்டு வேடிக்கை பார்க்கிறுர். இவ்வளவும் அவருக்கு விவர்த்தமேயாகையால், ஒரு துக்கத்தையு மடையமாட்டார். அவருக்கு நிரயத்துன்பம் வெகுநிர்லக்ஷ்யமாகையால், அந்நிரயத்துக்கேதுவான பாபகர்மங்களைச்செய்ய அவர் பின்னிடைய ஆவசியகமில்லை. அதனுற்றுன் ஸ்ரீமெய்கண்டதேசிகமணியை நிந்திக்கத் தலைப்பட்டார். இச்சைவத்திருவாளர்தூஷணம் நிரயங்களில், பெரிய நிரயத்தைக் கூட்டுமாகையால், அது எப்படியிருக்கிறது பார்ப்போம், அது நம்மைக்கலங்கச்செய்யுமோ - அதுவே கலங்கிப் பின்னிடுமோ பரீட்சிப்போமென்று கருதி, கங்கணங்கட்டிக்கொண்டிருக்கின்றுர் கண்டீரிவர். இவர்பந்தத்தைப் பொய்யென்றுகொண்டு விவர்த்தவாதஞ் சாதித்தது அநர்த்தவாதமாக முடிந்தமையால், இனி அதனுண்மையைச் சிறிதுகூறுதும்.

பிரமம் சுத்தஅறிவாயுள்ளது. அதற்கு அறியாமையில்லை. சூரியன் சோதிவடிவாயுள்ளவன். அவனுக்கு இருளில்லை. ஒருகால் சூரியனுக்கு விவர்த்தமாக இருள்வந்துமூடி, அதனுல் அவன் மயங்குவானுயின் அம்மயக்கம் கயிற்றரவு மயக்கம்போல்வதெனக் கொண்டு இவர் கரைந்திடலாம். அப்படிப்போலப் பிரமத்துக்கும் ஒருகால் விவர்த்தமாக அஞ்ஞானம்வந்துமூடி, அதனுல் அதுமயங்குமாயின் அம்மயக்கமுங் கயிற்றரவு மயக்கம்போல்வதெனக் கொண்டு இவர் வரைந்திடலாம். சூரியனிடத்திலேயே இவ்வவலட்சணவாதம் பொருந்தாதாயின், அறிவாகிய பிரமத்தினிடத்தில் நிலைபெறுமென்றுவாதிடல் அஸங்கதமாவதன்றி வேறுஎன்னுகும்? இதனுல் பிரமத்துக்கு விவர்த்தபந்தமுண்டெனலழிந்து, அப்பிரமத்துக்கு வேறுகிய ஜீவனிடத்தில் சத்தியபந்தமுண்டெனல் சாதிக்கப்பட்டு, இவரது ஹேயசித்தாந்தம் நாசமுற்றவாறறிக. "தானுயின்றன் கழலிணையத் தவிருமலந் தவிர்த்தற்—றுஞ்சுத்தனுயிருக்கை முத்தியாஎன்றுளோட்: — பூணுவே

ண்டுவதொன்று மில்லையெனினருக்கன் – புகுதவிருள்போமடியிற் பொருந்த மலம்போமே" என்று எமது அருணந்திசிவம் கட்டளையிட்டருளிய திருவாக்கே (பூர்வபட்சியார்போன்ற புபுக்ஷுக்களல்லாத) முமுக்ஷுக்கள் சிரமேற்கொண்டு வந்தித்து, உய்யுநெறியைக்காட்டி யுபகரிக்குமென்க. கண்ணை இருள்மூடியது விவர்த்தமாகாது. ஆன்மாவை அஞ்ஞானம் ஆவரித்தது விவர்த்தமாகாது. மெய்யாய்ச்சூழ்ந்த பூதவிருளைக் கதிரொளி கண்ணுக்குக்கழித்ததுபோல மெய்யாய்ச்சூழ்ந்த ஆணவவிருளை இவரது பிரமத்திற்கு (எமது ஜீவனுக்கு) சிவபரஞ்சுடர் கழித்து, தமது திருவடிப்பேறு நல்கி இன்புறச்செய்யுமென்க. மாந்திரிகன் கருடபாவனையால் தன்னைத்தாக்கிய சர்ப்பவிஷம் நீங்கி இன்புறுவன். அதுபோல ஜீவன் சிவபாவனையால் தன்னைத் தாக்கிய அஞ்ஞானவிஷம் நீங்கி, ஜநநமரணமொழிந்து, சிவப்பேறெய்தி இன்புறுவன். நிற்க.

இவர் கயிற்றரவுபோன்ற பொய்யானபந்தத்தையொப்பி, பந்தம் நித்தியமென்றல் கூடாதென்றும், நித்தியமான பந்தத்தை ஞானம்போக்காதென்றும், பொய்யான (தோற்றமாத்திரமான) பந்தத்தையே அந்தஞானம் போக்குமென்றும் பிரசங்கித்து வீண்காலம்போக்கியதை மேலே விஸ்தரித்துமறுத்ததே போதுமாயினும், ஈண்டுஞ் சிறிது கூறுதும். ஒரு சுத்தவீரனைச் சுட்டி, இவன் வெண்ணெவெட்டியென்று புகழ்வதுபோலவன்றோ அஞ்ஞானவைரியாகிய ஞானத்தைச்சுட்டி, இந்தஞானம் தோற்றரவினையொழிப்பதென்று இவர் கூறிய ஞானுதிக்கியம் நிலைபேறுகியது? அந்தச்சுத்தவீரன் மெய்யானகள்வனை மாய்த்தலொழிந்து, குற்றியின்மகனைக் குத்தியொழித்தான் என்று புகழ்வது அவனுக்குப்புகழாயின், நமதுபூர்வபட்சியார் மெய்யானபந்தத்தை ஞானமொழித்தலொழிந்து, பொய்ப்பந்தத்தையே அது பொடியாக்கிவிட்டது என்று கூறியது அதற்குப் புகழாகும். இவர் கடைசியாக ஞானத்தையிகழ்ந்து அஞ்ஞான போதகராய் வெளிவந்தாரென்பதே முடிவென்றறிக. இன்னுமிதனைப் பரியாலோசிக்கின், கயிற்றரவுபமானங்கொண்ட இவரது பந்தோற்பத்தியில் அரவுக்கு அதிஷ்டானம் கயிறுகின்றது. இதனல், அரவுபொய் - கயிறுமெய் என்று ஏற்பட்டது. இவ்வாறு ஏற்பட்டது மெய்யான வொருபுருடனுக்கேயாம். கயிற்றினைப்போல அதற்குவேறுகிய வொருபுருடனும் உள்

பொருளா யேற்படாதபோது, கயிற்றரவின் றேற்றப்பிரசங்கம் நிஷ்பலமாம். இவ்வுபமானத்தை நமதன்ப ரெடுத்துக்கொண்ட உபமேயத்துக் கிணக்கவேண்டியது அவருக்குத் தலைச்சுமையாம். பிரமமாகிய மெய்ப்பொருளில் உலகமாகிய பொய்ப்பொருளைக்கண்டு பிரமித்த (இவ்விரண்டற்கும்வேறாய) மெய்யானபுருடன் யாவன்? கயிற்றரவாகிய விச்சாபந்தத்தை இவர் புகழ்ந்ததற்கிணங்க அந்தப்பந்தத்தை யெய்திய புருடனைக்காட்ட வகைகெட்டு, அவனையும் பொய்யென்று சாதித்தவராயினர். அதனால், அந்தஞானத்துக்கு வேறாகாத பிரமத்தையும் பொய்யென்று தாபித்தவராயினர். இதனால் இவருக்கும், ஞானத்துக்கும், ஞானகனமாகிய பிரமத்துக்கும் ஸம்பந்தங்களொழிந்து எல்லாம் பொய்ப்பொருள்களென்று சாதிக்கப்பட்டமையே நிலைபெறாயிற்று. இனி இவரது பிரசங்கத்தைத் தலைமாறிக் கூறிப்பார்ப்போம். ஒருபுருடன் கயிற்றில் பொய்யரவினைக்கண்டு பிரமித்துப் பின்னர்த்தெளிந்ததுபோல, இவரது மெய்யாகியபிரமம் வேறு எந்தமெய்ப்பொருளில் பொய்யாகிய எதனைக்கண்டு பிரமித்து, பின்னர்த்தெளிந்தது என்றெழுங்கடாவுக்கு இவரெவ்வாறு விடையிறுக்க வல்லார்? பிரமத்துக்கு இரண்டாவதுபொருளை யொப்புவதும், அதற்குப் பிராந்திஞானங்கூறி, பின்னர்த் தெளிவுண்டாகச் செய்வதும் இவரதுபிரமத்தை இழிபொருளா யொதுக்குவதற்கே உபகாரமாயினமையால், இந்தப்பட்சமும் அஸத்தா யொழிந்ததெனவறிக. வேறு எவ்விதமாகக்கூறினும், பிரமத்தின் றலையிலேறிய ஆபாசத்தை யிறக்க இவரால் முடியாதாகையால், இவரது மதத்தில், பிரமலட்சணம்-ஜீவலட்சணம்-பந்தலட்சணம்-ஞானலட்சணம்-மோட்சலட்சணம் முதலியவைகள் சாதிக்கப்பட்டவா றில்லையென்பதே துணிவாயிற்று. இவரது சங்கராசாரியார் அருமையாகத் தேடியெடுத்துப் பாடியஞ்செய்த பத்து உபநிஷத்துக்களில், எங்காவது ரஜ்ஜு-ஸர்ப்பஞானங் கூறி, பிரமத்தைத் தெருவில் அலையவிட்டதுண்டா? விவர்த்தவாதப்பிரசங்கமுண்டா? விவகார பரமார்த்த பிரசங்கமுண்டா? இழ்களுக்காகப் பிறந்த சில ஸாமான்யோபநிஷத்துக்களை இவர் தேடியெடுத்துக்கொண்டு எமக்குப் பூச்சிக்காட்டினால், யாம் அஞ்சுமாறு யாங்ஙனம்? இந்திராஸ்த்ரம் - சந்திராஸ்த்ரம் - பிரமாஸ்த்ரம் - நாராயணாஸ்த்ரம் முதலானவை அஸ்த்ரங்களே

யாயினும், பாசுபதாஸ்த்ரம் பெற்றவொருவனுக்கு அவை லக்ஷ்யமாகா. "తపస్సలస్యయదాచర్మ యదాత్మ్రప్రస్యాత్మీమం" என்று சுருதியில் பெறப்பட்ட வாக்கியார்த்தத்தையே "நெல்லுக்குமிதவிடும் நீள்செம்பிற் காளிதமுஞ்-சொல்லிற் புதிதன்று தொன்மையே" என்று எமது மெய்கண்டப்பெருமான் விளக்கியருளினரென்க. இதனையே ஸ்ரீதாயுமானச்செல்வனார் "கருமருவு குகையனைய காயத்தினடுவுட் களிம்புதோய் செம்பனையயான்" என்று கூறியதன்றியும், "காரிட்டவாணவக் கருவறையிலறிவற்ற கண்ணிலாக்குழவியைப்போற், கட்டுண் டிருந்தவெமை" என்றும் விதந்தருளினர். ஆணவபந்தம் சத்தியமும், அது ஜீவனுக்கே உரியதென்பதும் போதரவே ஷை தாயுமானசுவாமிகள் தமதுபந்தநிலையை "ஆணவத்தோ டத்துவிதமானபடி" என்று பிரகாசப்படுத்தியருளினர். இவ்வுண்மை "ஆணவவழுக்கடையு மாவியைவிளக்கி" என்றருளிச்செய்த ஸ்ரீமத் அருணகிரிநாதர் திருவகுப்பினிற் கண்டெடுத்த மாணிக்க மணியாமென்றறிக. இன்னு மிவ்வாறுபோந்த பிரமாணங்கள் பலவுள. இவைகளையெல்லாம் பொய்யாக்க நமதன்பரெடுத்துக் கொண்ட ஆபாஸவாதம் இனியெங்ஙனே ஜீவித்திடும்? இவற்றால் பந்தம் சத்தியமென்றே ஸ்தாபிக்கப்பட்டு, அந்தப்பந்தத்தின்வலியை (மலவலியை) அடக்கி வியாபிக்குந்தன்மையுடையதாய், ஞானம் பிரகாசப்படுத்தப்பட்டு, அந்தஞானந்தானே சிவபரஞ்சுடரினிடம் ஆன்மாவைச் சேர்ப்பிக்குமென்று வேதாதிகள் துணிந்துகூறுமென்க.

( எங்ஙனமெனின் )

"ఉమాసహాయంపరమేశ్వరంప్రభుం! త్రిలోచనంనీలకంఠంప్రశాంతం। ధ్యాత్వా మునిర్గచ్ఛతిభూతయోనిం! సమ స్తసాక్షింతమసఃపరస్తాత్" என்ற சுருதிவசனம் உமாஸஹாயத்வாதி லிங்கங்களோடுகூடிய ஸ்ரீபரமேசுவரரைத் தியானிப்பதனால் (சிவஜ்ஞாநவிசாராதிசயத்தால்) ஆன்மா இருளின்மேற் போவன் (ஆணவவிருளைக் கடந்திடுவன்) என்று விளக்கியது.

"ఈశంజ్ఞాత్వామృతాభవంతి" என்ற சுருதிவசனம் ஈசனை அறிவதால் (ஸ்ரீபரமேசுவரஞானத்தால்) அமிர்தரூபியாகிய அவ்வீசனையே ஆன்மா அடைகின்றான் என்று போதிக்கின்றது. அம்ருதம் சாகாமையைப்பயப்பது. ஆன்மாவுக்கு மரணத்தையும், ஜநநதுக்கத்தையுந் தந்துகொண்டிருந்த ஆணவபந்தத்தைக்கடந்தான் ஆன்மா என்பதே இதன்முடிவென்றறிக.

"బ్రహ్మవేదబ్రహ్మైవభవతి" என்ற சுருதிவசனம் பிரமமாகிய சிவத்தை அறிந்தவன் (சிவஞானசித்திபெற்றவன்) பரமாகிய அந்தச்சிவத்தையே அடைந்திடுவன் என்று தெரிவிக்கின்றது. பூர்வம் அபரமாகிய ஆணவத்தோடுகூடியிருந்த ஆன்மா இப்போது பரமாகிய சிவத்தோடுமருவி இன்புற்றதென்பதையே ஈண்டறிந்திடுவர் பெரியோர்.

"తరతిశోకమాత్మవిత్" என்ற சுருதிவசனம் சிவபரமாத்மாவுக்கு அடிமையென்று ஆத்மாவாகிய தன்னையறிந்தவன் முன்னே ஆணவபந்தத்தாலெய்தியிருந்த சோகத்தினின்றும் அப்புறப்பட்டு இன்புறுவன் என்று அறிவிக்கின்றது. இந்த அர்த்தத்தையே ஸ்ரீதாயுமானசுவாமிகள் "என்னைத்தா னின்னவண்ணமென் றறிலா வேழை – தன்னைத்தானறிந் திடவருள் புரியேதிற் றக்கோய்– பின்னைத்தானின்ற னருள்பெற்ற மாதவப்பெரியோர்-நின்னைத்தானிக ராரென வாழ்த்துவர் நெறியால்" என்று விசதப்படுத்தினரென்றறிக.

"జ్ఞాననిర్మథనాభ్యాసాత్పాశందహతిపండితః" என்ற சுருதி வசனம் சிவஞான பண்டிதனானவன் ஆணவபாசத்தைத் தகித்திடுவன் என்று வெளிப்படுத்தியது. முன்னே தன்னைவெதுப்பியிருந்த ஆணவத்தை (சிவசம்பந்த விசேடத்தால்) பின்னர்த் தான் வெதுப்பினனென்பது வெளிப்படை. தான் வெதுப்புதலாவது முன்னர் ஆதிக்யஞ்செலுத்தியிருந்த ஆணவம் இப்போது தலையெடுக்காது அடங்கிநிற்கச் செய்ததேயாம். இன்னுமிவ்வாறு பலவசனங்கள் ஆன்மா சிவஞானசித்தியினாலேயே சத்தியமான பாசத்தினது வலிகுன்றச்செய்து நிலைபேறெய்திய சிவானுபவ வாழ்வினைப் பிரதிபாதித்துக்கொண் டிருக்கின்றனவென்றறிக.

நமதன்பர் ஆணவபாசத்தின் றன்மையறியாது, மாயையினையே மூலமலமெனக்கருதிக் குழறிவழிந்ததை யாம் மேலே மறுத்தோமாயினும் இந்த மாயாமலம் ஆணவத்தைப் பேதித்துச் சிறிதுஞானத்தைவிளக்குவது என்றதற்கு மாறாக "மாயை மயக்குமுஞ் செய்யுமன்றே" என்று சிவஞானசித்தியார் கூறியதென்னையெனின், ஈண்டு "மயக்கமும்" என்றதனால் "தெளிவும்" என்பது தானே பெறப்படுகின்றது. தெளிவினையும், மயக்கத்தையும் செய்யுந்தன்மை எவ்வாறெனின், ஆணவத்தைப் பேதிக்குங்கால், சிறிதுசிறிதாய் ஞானம்வெளிப்படுகையால் தெளிவைப்

பயந்ததெனல் அமையும். அம்மாயை காரியப்பட்டவநந்தரம் தேகேந்திரியாதிகளாக உயிர்களிடஞ்சேர்ந்து அவ்வுயிர்களை ஸம்ஸாரபந்தத்தில் வீழ்த்தி மயக்கினமையால், "மயக்கமுஞ் செய்தது" மாயை என்றது நிலைபெறுமினதுணர்க. இம்மாயை ஆணவபந்தத்தைப்போல ஆன்மஞானத்தை மறைக்கவறியாது. மறைத்தலுக்கும்,மயக்குதலுக்கும் பேதமுணராது ஒருவர் கட்டாயின்,அது அவரது அறியாமையேயாம். அழுக்குப்படிந்த நீரில் தேற்றாங்கொட்டை சேர்க்கப்பட்ட காலத்து,அந்நீரைத் தெளிவித்து, முன்னழுக்கைக் கீழடங்கச்செய்து, தானும் அதனோடு கீழடங்கிப்போகும். ஒரு அழுக்கு நீரைக்கெடுப்பதும், மற்றோரழுக்கு முன்னழுக்கைத் தவிர்ப்பதுமாகிய நுட்பமுணர்ந்த விவேகிகள் ஆணவம் ஆன்மாவிற்படிந்த அழுக்கும், மாயை அவ்வான்மாவிற்கு அதன்மூலவழுக்கைத் தவிர்க்குமழுக்குமாகவுணர்ந்து இன்புறுவரென்க. இவ்வருமை யெல்லாம் சைவநூலறியாதார்க்குத் தெரிந்திடல் ஸம்பாவிதமாகாதென்க. இனியேனும் பூர்வபட்சியார் ஞானநூல்களைத்தெளிந்து குணப்படுவாராக. இவர் ஞானநூல்களல்லாத ஆத்மபோதம்-வாசுதேவமநநம்-வேதாந்தசூடாமணி-சத்தப்பிரகரணம்-பஞ்சதசப்பிரகணம்-கைவல்யம்-வாசிட்டம்-பிரபோதசந்திரோதயம் - விவேகசாரம் முதலிய ஆபாசநூல்களை மெச்சிவாழ்கின்றவர். இவருக்குப் பதிஞானநூல்களாகிய சிவஞானபோதம்-சிவஞானசித்தியார்-சிவப்பிரகாசமுதலியன கசந்திடுவது ஸஹஜந்தான். இவரினத்துப் பெரியாரையே "பசுநூல்கற்கும்-பிச்சரைக்காணுகண் வாய்பேசாதப் பேய்களோடே" என்றெடுத்தியருளின ரெம்பெரியாரென்றறிக. இந்தப்பசுஞானபோதகர் "மாயையானது சுத்தப்பிரமத்தை ஆச்சேதனம் பண்ணியது. அஞ்ஞானம் சிவஞசிரிதம் என்ற வாசஸ்பதிகூறியது பிசகு" என்று "தத்வார்த்ததீப"க்கார ரெழுதிய வெழுத்தையேகற்று வெளிவந்தவர். இவரினத்தவர்கற்ற தப்புப்பாடத்தை "பிரஹ்மதத்வநிரூபணம்" என்னுநூலில், எமது ஆசிரியமணியாவார் மாய்த்து, சரியான பாடத்தை ஸ்தாபித்திருக்கு முண்மையை விவேகிகளறிந்து குணப்பட்டு வருகின்றனர். அவரைப் பின்பற்றிவாழும் புண்ணியமுளதேல்,நமதன்பரும் நன்மைகடைப்பிடித்து ஒழுகுவாராக. இவற்றையெல்லாந் தெளியும் புண்ணியமிழந்து, கேவலம் பசுஞானப்பிராப்திக்கருகராகிய பூர்வபட்சியார் பதிஞான

ச்செல்வர்களைச் (சிவாநுபூதிமான்களைச்) சுட்டி, இவர்கள் ஞானவிசாரஞ்செய்வது எற்றுக்கென்றும், மெய்கண்டார் முதலினோர்க்கு ஞானமின்றெனல் குன்றின்மேலிட்ட விளக்காமென்றுங் கூசாதெழுதி வேசாறிப்போனது குருட்டறிப்பாளன் குபேரனைப்பழித்ததற்கே நிதரிசனமாம். சிவசன்மார்க்கம் பற்றிவாழும் அதிகாரிகளில், சரியையினின்றோனது செல்வத்துக்குமுன்னே மாயாவாதஞானி தலைதூக்கி, வாழானென்றுணர்க. இவனைச்சேர்ந்த நமதன்பர் பிரமஞானிகள் சிரமேற்சூடிவந்திக்கும் ஸ்ரீபாதபத்மங்களையுடைய எமது அப்பனை (ஸ்ரீமெய்கண்டநாதனை) வரம்புகடந்து தூஷித்தது தக்ஷன் சிவபரஞ்சுடரைத்தூஷித்து, வாரிக்கொண்ட பெரும்பயனையே அடைதற்குரியாரென்று தெரிவித்ததென்றுணர்க. விரிக்கிற் பெருகும். எடுத்துக்கொண்ட விஷயத்தை இம்மட்டினிறுத்தி விசிராந்தியடைவாம். நிற்க.

நமதன்பர் தமது ஆபாஸச்சுவடியில், பல சைவதூஷணங்களை நிரப்பி, அவற்றுள் மெய்கண்டதூஷணமும் ஒன்றாகச் சேர்த்து வெளியிட்ட துர்யுக்தியைப்போக்கி அவருக்கு ஒருவாறு உபகரித்தோம். மற்றெல்லாத் துர்யுக்திகளையும் போக்காமல் யாம்விடுத்தோமென்று இவர்குறைகூறுவர். எவ்வளவு காயிதச்சுமைகளைக் கட்டுக்கட்டாய் வரித்துப் பார்த்தாலும், சொன்னதையே சொல்லிச்சொல்லித் தூஷிக்குந் தூஷணங்களேயன்றி வேறொன்றுமில்லை. இச்சிவதூஷணங்களைப் பார்த்து வீண்காலம்போக்குவது அநாவசியகமெனக் கொண்டே உதவியற்றவிவரது புத்தகக்கந்தல்களை வரித்துக் காலங்கழிக்கும் வழக்கத்தை யாம்வைத்துக்கொள்ளவில்லை. யாம் வாளாவிருப்பினும், எமது ஆப்தர்களாகிய ஸ்ரீ வேங்கடரமணதாஸர்-ஸ்ரீ குருஸ்வாமிசர்மா-ஸ்ரீ செந்திநாதையர்-ஸ்ரீ அரங்கசாமிஐயர்-ஸ்ரீ வேங்கடகிரி சாஸ்திரியார்-ஸ்ரீ முருகவேள்-ஸ்ரீ குகதாஸர்-ஸ்ரீ அரக்கோணவாசியார்-ஸ்ரீ தினகரனார்-ஸ்ரீ சபாபதிநாவலர்-ஸ்ரீ சுந்தரனார்முதலினோர் எழுதியிருக்கும் விஷயங்கள் மலையிலக்காயுள்ளன. அவற்றையெல்லாந் திரட்டி அச்சிடின், பூர்வபக்ஷியினது சுவடிகள் சிறுகுப்பையாய் மிதியுண்டுபோம். அன்றியும், குசப்பேட்டை, ஈ-சச்சிதானந்தப்பிள்ளையின் வாதகாலந்தொட்டு, இதுவரையில் எமது ஸ்ரீலஸ்ரீ நாயகரவர்கள் வெளிப்படுத்திய புத்தகங்களும் பத்திரிகைகளும் ஏராளமா

யுள்ளன. இவைகளைக் கவனித்துமகிழும் எம்மனோர்க்கு எதிரி கவடிகள் ஒருபொருளாய்நிற்பது யாங்ஙனம்? யாமுஞ் சில பத்திரிகைகளும் புத்தகங்களும் வெளியிட்டிருக்கின்றோம்: இப்போது நமதன்பர் (பூர்வபட்சியார்) வெளிப்படுத்திய வழு வாசகத்துக்கு "சததூஷணி" என்று பெயரிட்டது இவருக்கு ப்பெரியதோரவமானமாம். எங்ஙனமெனின், "சததூஷணி" என்னுமோர் மாயாவாதகண்டனகிரந்தம் (போலிவேதாந்த கண்டனகிரந்தம்) வைஷ்ணவசித்தாந்த(வடகலைக்)குருவாகிய வேதாந்ததேசிக ரென்பவரால் நெடுங்காலத்திற்கு முன்னர்ச் செய்யப்பட்டுள்ளது. அதனை ஏறெடுத்துப் பார்க்கவுஞ் சக்தி யற்றுப் பூர்வமாயாவாதிகள்(இவரதுசமயமுன்னோர்)பதுங்கிக் கிடந்தனர். இப்போதும் இவரினத்தவர் பதுங்கிக்கிடக்கின்ற னர். தங்கள்மதத்தைப் பூர்வபட்சப்படுத்தி வெளிப்படுத்திய நூலுக்கு எதிரிகளிட்ட பெயரைக்கௌரவித்து,அதனைத்தமது நூலுக்குப் பெயராக்கிக்கொண்டதைப்பார்த்துச் சிறுவர்க ளுஞ் சிரிக்கின்றார்கள். வேதாந்ததேசிகரல்லாத வேறு வைஷ் ணவாசாரியர்களும் இவரது மாயாவாதத்தை மடியவைத்தார் கள். இவர்போலவே துவைதிகளாகிய மாத்வர்களும் "பிரச்சந்ந பௌத்தம்" என்றொதுக்கி, "வாயுஸ்தவம்" முதலியநூல்களால் மாயாவாதத்தை மாய்த்தொழித்தனர். இவர்மதநூலை "మాయావాదమసచ్ఛాస్త్రం" என்று பதுமபுராணம் ஒதுக்கியது. பிரச்சந்ந பௌத்தமென்றது மறைந்தபௌத்தமென்று பொருளாம்.நாஸ் திகராகிய பௌத்தர்களை ஸ்ரீமணிவாசகப்பெருமான் அரசனைக் கொண்டு தண்டிப்பித்தபொழுது சிவத்ரோகிகள்பலர் தண் டனைக்கஞ்சி, விபூதிருத்ராட்ச சிவபூஜாதிகளைத் தாங்கி, அந் தச் சைவவேடத்தின்மறைந்து திரிந்தமையால், அன்னோர் பிரச்சந்நபௌத்த ராயினர். அவர்தாமே இப்போது சைவ் வேடந் தாங்கித்திரியும் மாயாவாதிகளென்றறிக. சிவன் மிச்சை - விபூதிமிச்சை - ருத்ராக்ஷம் மிச்சை - சிவாலயம் மிச்சை - சிவபூஜைமிச்சை என்றுதூஷிப்பவர்கள் இச்சைவ மங்கலங்களைத் தாங்குதல் "யார்குடியைக் கெடுக்கவோ ஆண்டிவேஷம் போட்டது" என்ற பழமொழிக்கேயன்றோ இணங்கியது? ஜாதி கிறிஸ்தவர் என்பவர்கள் தங்கள்மதவிரோதமான ஜாதியை யநுசரித்து, விபூதி - குங்குமம் - மஞ்சள் முதலியவைகளை வீட்டிலிருக்கும்போது தழுவி, பாதிரிகளிடம் போகும்போது

நன்றாய்க்கழுவிவிடுகிறார்கள். அவர்களோடும் நமது மாயாவாதிகளொருசாரொத்திருக்கின்றனர். "கீறில்லாநெற்றிபாழ்" என்று உலகன்னை கூறினள். பாழ்முகமாயிருந்தால் (சூனியமுகங்களைத்தாங்கினால்) தம்மை வைதிகரொதுக்குவாரென்று அஞ்சியே விபூதியா லுடல்வெளுத்துக்காட்டி, சாமான்யர்களைக் கெடுக்கின்றனர். இவரது ஜாலவித்தையை ஸச்சிதானந்தப்பிள்ளையை மறுத்து வெளிவிட்ட "உத்தமவாதநூலவாதூலத்தில்" "ஒன்றுமிலா ஞானமுரைப்பா யுனதுமுகத் - தொன்றவேபூசவதென் னுண்பொடியே - துன்றுமதை - இன்றமுதற்பூசா திருப்பையேனன்றாங்கான் - வென்றியிலாய் சொன்னேன்விடு" என்று எமது நாயகரவர்கள் நன்குபிரகாசப்படுத்தின ரென்றறிக. இந்தப் பிரச்சந்நசமயிகளையே ஸ்ரீவாசகத்திருமுறையில் "புத்தன்முதலாய புல்லறிவிற்பல்சமயம்" என்ற திருவாக்கும், "மாயாவாதமென்னுஞ் சண்டமாருதம்" என்ற திருவாக்குந் திரஸ்கரித்தவாறுணர்க. இவ்வளவு வாய்மைகளை யாம் நமதன்பருக்குணர்த்தியும், அவற்றைக்கவனியாமல் (நாங்கள் பல புத்தகங்களை வெளியிட்டோம். எங்களை மறுத்தாரில்லை என்று பேசி) அவர் கௌரவம்பாராட்டிக்கொள்ளாமல் ஒழியார். அப்போது கிறிஸ்தவர்கள் சைவ வைஷ்ணவ மாயாவாதமதங்களையும், ஏனைய வைதிகாசாரங்களையும், திரிமூர்த்திகளையுந் தூஷித்து வெளிப்படுத்தியிருக்குந் துண்டுபத்திரிகைகளையும், புத்தகங்களையுந் திரளச்சேர்த்துப் பத்துவண்டிக்கு அதிகமான பாரமேற்றி, இவருக்குக்கொண்டுவந்து காட்டுவோம். அவைகளுக்கெல்லாம் பதிலெழுதாமையால், வைதிகசிலர்க்கு ஒரு குறைவுண்டோ? பிரகிருதமாயாவாதிகள் தமதுகையில் அச்சாபீசு இருக்கிறதென்று காயிதக்குப்பைகளில் மையையேற்றி, சிவத்ரோஹவியாபாரஞ்செய்து வருவதை யாம்பொருள்படுத்தாமல் சைவதவநிலைமேற்கொண்டு எமதுகண்மணியை வந்தித்து வாழ்த்துவாமென்க. இந்த ஸத்கிரந்தம் ஸாதுக்கள் க்ஷேமார்த்தம் உலகில் நீடுவாழ்க. சுபம்! சுபம்!! சுபம்!!!

## வாழ்த்து.

ஒத்திசையாப் பாடியங்க ளுரைத்து மலைந்தவர்நாண
அத்துவித மெனுஞ்சொல்லுக் கரும்பொருள்கண் டெமையா
மெத்துபுகழ் மெய்கண்ட சிவம்வாழி விளங்குமவர் [ண்ட
சத்துரைதேர்ந் தவர்மூவர் சந்தான நெறிவாழி.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தகுருப்யோநம:

# மெய்கண்டசிவஸ்தவம்.

காப்பு.

மெய்கண்டதேவன் வியனருள்வாழ்த்திடக்
கைகொண்டமாமுகன் கழல்பணிவோமே.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அண்டரெலாந் தொழுதிறைஞ்சி யரற்றி நிற்ப
வவர்க்கொளித்த வரன்பெருமை யறிந்த வன்மெய்
கண்டசிவ னெனவுலகங் கழறு மாகக்
கண்ணிரண்டு மில்லாத கயவ னேனேன்
புண்டரிக நாயகனைப் பழித்துச் சொன்ன
புன்மையென வவ்வுரைக்கு மாறு கொண்டு
பண்டியலாப் பழிகூறிப் பாவந் தேறிப்
பகட்டில்வருந் தென்னவனூற் படுவ ரென்னே. (1)

பொய்கண்டா ருணராமற் புதையக் கொண்டு
புனிதமாம் பொருடருமத் துவிதச் சொல்லின்
மெய்கண்டா னீயென்றே மேலோர் கண்ட
மெய்ம்மொழியே மேல்வருமெம் பிறவி நோய்க்குக்
கைகண்ட வினியமருந் தாகு.மென்றுற்
கண்மணியே நின்மலர்வாய்க் கனிந்த தீஞ்சொ
லுய்கண்ட சிவஞான மூட்டு மென்ன
வுணர்ந்துரைக்க வேண்டுவது முண்டோ சொல்லாய்.

பூவேயப் பூவினிடைப் பொலிந்த தேனே
பூந்தேனிற் பொதிசுவையே புகழ்மெய் கண்ட
தேவேயெந் தெள்ளமுதே சிவஞா னத்தின்
றெளிவேநின் சீர்த்திசொலச் செல்லார் தங்க

ணுவேவெந் தீநாமற் றதனைக் கேளா
நலமில்செவி யேயரவ நண்ணும் புற்றுங்
சோவேநின் குணநினையார் கூடும் வாழ்க்கை
சோதிப்புறுவெந் நரகமெனக் கூறு வேமால். (3)

அணியேயெம் மாருயிருக் குயிரே தாவா
வருமருந்தே யருணல்குங் குருவாய் வந்த
மணியேநற் சிவஞான வாழ்வே போற்று
மறைப்பொருளா மத்துவித மெய்மை நாட்டுங்
கணியேயெங் கைவந்த கனியே நான்முன்
கண்டதவப் பயன்கண்டாய் நின்னைக் காண்டல்
நணியேயெம் பிறவிவே ரறுக்குங் கூர்த்த
நவ்வியமே மெய்கண்ட நாத தேவே. (4)

வேறு.

உய்திகொண் டோநின் னருள்வழி நிற்றலி னுய்வதில்லாப்
பொய்திகழ் பாழுஞ் சமயப் புலையர் புகுநரகின்
செய்திகண் டோமெங்கள் மெய்கண்ட தேவநின் சேவடிக்கீ
ழெய்தினின் றேமிது தாம்பெறும் பேறென் றிசைந்தனமே. ()
௫

வாழ்த்து.

மெய்கண்டான் வாழி விளங்க வவன்மொழிந்த
சைவந் தழைந்தநூ றுன்வாழி—துய்யவவன்
சந்தானம் வாழி சகம்வாழி வாழியே
சிந்தாச் சிவனடியார் சீர்.

திருச்சிற்றம்பலம்.